Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 6, 2021

திங்கட்கிழமை டிசெம்பர் 06, 2021 | ஒளி: 07 கதிர்: 171 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

கிளிநொச்சியில்

## குண்டு வெடிப்பு: ஒருவர் பலி



கிளிநொச்சி, உமையாள்புரம், சோலை நகர் பகுதியில் குண்டொன்று வெடித்ததில் ஒருவர் மரணமடைந்தார். சம்பவத்தில் காயமடைந்த 13 வயதான சிறுவன், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# இலங்கையின் கண்களில் பார்வையை இழந்தோம்

## வெட்கித்தலை குனிந்தார் பாக். வைத்தியர்

இலங்கை எங்களுக்கு கண்களைத் தானமாக வழங்கியது, ஆனால், நாங்கள் பார்வையை இழந்துவிட்டோம் என்று பாகிஸ்தானின் முன்னணி கண் வைத்தியர் நியாஸ் ப்ரோஹி வருத்தம் தெரிவித்துள்ளார்.

1967 ஆம் ஆண்டு முதல் குறைந்தது 35,000 விழிவெண்படலங்களை பெற்றுள்ள பாகிஸ்தான், இலங்கையிடமிருந்து கண் தானம் பெறுவதில் முதலிடத்தில் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சியால்கோட்டில் இலங்கையைச் சேர்ந்த தொழிற்சாலை முகாமையாளர் பிரியந்த குமார தியவதனவை ஒரு குழுஅடித்துக் கொலை செய்த நாள் முதல், நாட்டில் உள்ள பலரைப் போலவே நானும் துயரத்தில் ஆழ்ந்திருப்பதாக பாகிஸ்தான் - இலங்கை கண் தான சங்கத்தின் உறுப்பினரான டொக்டர் ப்ரோஹி கூறினார்.


இரங்கல் தெரிவிக்கும் வகையில் இலங்கை கண் தான சங்கத்துக்குக் கடிதம் எழுதியுள்ள அவர், 'நாங்கள் வெட்கத்தால் தலை குனிகிறோம்; நாம் பார்வையை இழந்து விட்டோம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கராச்சியில் உள்ள பிரபல ஸ்பென்சர் கண் வைத்தியசாலையின் முன்னாள் தலைவரான ப்ரோஹி, இதுவரை பல கண் அறுவை சிகிச்சைகளைச் செய்துள்ளார்.

பாகிஸ்தான் தொலைக்காட்சி ஒன்றில் பேசிய அவர், உலகின் பல்வேறு நாடுகளுக்கு இலங்கை 83,200 விழிவெண்படலங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இலங்கையின் நன்கொடைகளில் 40 சதவீதம் பாகிஸ்தான், பெற்றுள்ளது. அதிக அளவில் பாகிஸ்தான் தானம் பெறுகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தானின் ஸ்பென்சர் கண் வைத்தியசாலையில் டொக்டர் எம்.எச்.ரிஸ்வியால் மேற்கொள்ளப்பட்ட முதல் கண் அறுவை சிகிச்சை இலங்கையால் தானமாக வழங்கப்பட்ட விழிவெண்படலத்தைக் கொண்டே செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.



# பிரியந்தவின் சடலம் இன்று கொண்டுவரப்படும்



பாகிஸ்தானில் சியால்கோட் பகுதியில் கலகக் கும்பலால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு, 2021 டிசெம்பர் 03ஆம் திகதி கொலை செய்யப்பட்ட தியவடனகே தொன் நந்தசிறி பிரியந்த குமாரவின் சடலம் இன்று (06) ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை ஊடாக, அரச செலவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என வெளிநாட்டு அமைச்சு நேற்று (05) அனுப்பியிருந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

ஒமிக்ரானுக்கு எதிராகத் தடுப்பூசி செலுத்துவதற்கு

# ஒத்துழைப்பு வழங்குங்கள்



## வல்லரசு நாடுகளிடம் ஜனாதிபதி கோரிக்கை

### தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதற்கு அதிக செலவு

### கடன் மன்னிப்பு வழங்கல், கடன் மறுசீரமைப்பு வரவேற்கத்தக்கது

ஒமிக்ரான் மாறுபாட்டுக்கு எதிராக தடுப்பூசி செலுத்துவதற்கு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வல்லரசு நாடுகளிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் நேற்றுமுன்தினம் (04) மாலை ஆரம்பிக்கப்பட்ட இந்து சமுத்திர மாநாட்டின் ஆரம்ப உரையை நிகழ்த்தும் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# கருத்துகளை வெளியிடும் சுதந்திரத்தை நசுக்க முயற்சி

எஸ்.கணேசன்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரம் இருக்கின்றது. எனவே, அதற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெறுவது கண்டிக்கத்தக்கது. இவ்வாறான நடவடிக்கைகள் ஜனநாயக ஆட்சிக்கு விரோதமான செயற்பாடுகளாகுமென ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# எட்டு முதல் 'நோ கட்'

புதன்கிழமை (08) முதல் நாடளாவிய ரீதியில் மின்சார விநியோகம் வழமை போன்று இடம்பெறும் என்று இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர்.

தொடர்ச்சி P2



இந்தியாவிலுள்ள இலங்கையர்களின் வாக்கில்

# அரசியல்வாதிகளுக்கு அக்கறை இல்லை

வி.நிதர்ஷன்

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை மக்கள் வாக்களிப்பது தொடர்பில், அரசியல்வாதிகள் பெரிதாக அக்கறை கொள்ளவில்லை எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## மனிதாபிமானமற்ற சூழலில் மலையகத் தொழிலாளர்கள்

### அறிக்கையில் ஐ.நா. நிபுணர் வேதனை

இலங்கையின் மலையக தமிழ்த் தொழிலாளர்கள், தேயிலைத் தோட்டங்களில் உழைப்பதன் மூலம் நாட்டுக்கு விலையுயர்ந்த அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருகின்றபோதும், அவர்கள் "மனிதாபிமானமற்ற மற்றும் அவமதிக்கப்படும்" சூழ்நிலையில் வாழ்கின்றனர் என்று ஐக்கிய நாடுகளின் நிபுணர் ஒருவர் கூறியுள்ளார் என, சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# சங்கரியை சந்தித்து சம்பிக்க பேச்சு

சுப்ரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க, பல்வேறான சந்திப்புகளிலும் ஈடுபட்டிருந்தார். அவர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரியை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடல், கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்று (05) காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

# "பிரியந்தவின் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்குவோம்"

பாகிஸ்தானில் வைத்து மிலேச்சத்தனமாக அடித்துப் படுகொலை செய்யப்பட்டு எரியூட்டப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் குடும்பத்தினருக்கு பெற்றுகொடுக்கக்கூடிய சகல நிவாரணங்களையும் பெற்றுகொடுக்கப்போவதாக வெளிநாட்டு தொழில்வாய்ப்பு இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ஒமிக்ரான் பெண் வீடு திரும்பினார்

நைஜீரியாவிலிருந்து வருகை தந்தபோது ஒமிக்ரான் தொற்று அடையாளம் காணப்பட்ட பெண், லுனாவ தனிமைப்படுத்தல் மையத்துக்கு அனுப்பப்பட்ட போதிலும், ஒரு நாள் மாத்திரம் அங்கு தங்க வைக்கப்பட்டிருந்ததாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# மரணங்கள் அதிகரிப்பு



எப்.முபாரக்

கிண்ணியா - குறிஞ்சாக்கேணி படகுப்பாதை கவிழ்ந்த விபத்தில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதற்கமைய, குறிஞ்சாக்கேணி படகுப்பாதை கவிழ்ந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 8ஆக உயர்வடைந்துள்ளது.

தொடர்ச்சி P2

# மொட்டு எம்.பிக்கள் மஹிந்தவிடம் எடுத்துரைப்பு



நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் அமைச்சரவைக்கும், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் தெளிவுப்படுத்த வேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் குழு வலியுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

# 5 பிள்ளைகள் காட்டில்; காதலனுடன் பறந்த தாய்

## ஆழ்ந்த உறக்கத்தில் கணவன் இருந்துள்ளார்

தனது ஐந்து பிள்ளைகளையும் காட்டில் தவிக்கவிட்டுவிட்டு, முறையற்ற காதலனுடன் தாயொருவர் தலைமறைவான சம்பவம் வாரியபொல, அம்பகடவர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

காட்டில் ஒரிடத்திலிருந்து பிள்ளைகள் அழும் சத்தம் கேட்பதாக, பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போதே, அந்த ஐந்து பிள்ளைகளும் மீட்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

# ஒமிக்ரானை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் தீவிரம்

கொரோனா வைரஸின் ஒமிக்ரான் மாறுபாட்டின் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பிரியந்தவின் சடலம் இன்று கொண்டுவரப்படும்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அவரது அடுத்த நிலை உறவினர்களால் சடலம் ஏற்றுக்கொள்ளப்படும். இந்த விடயத்தை, வெளிநாட்டு அமைச்சு ஒருங்கிணைத்து வருகின்றதென அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தியவடனகே தொன் நந்தசிறி பிரியந்த குமாரவின் மரணம் தொடர்பிலான விசாரணை அறிக்கையை வழங்குமாறு இஸ்லாமாபாத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சிடம் கோரியுள்ளது.

இழப்பீடுகளை வழங்குவது தொடர்பில் பாகிஸ்தான் அதிகாரிகள் மற்றும் இறந்தவரின் தொழில் தருநருடன் வெளிநாட்டு அமைச்சின் ஒருங்கிணைப்புடன் இஸ்லாமாபாத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றது என்றும் வெளிநாட்டு அமைச்சு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எட்டு முதல் 'நோ கட்'

எனினும், இன்று (06) மற்றும் நாளை (07) சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்படக் கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த வெள்ளிக்கிழமை (03) முற்பகல் 11.30 மணியளவில் பிரதான மின் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாடளாவிய ரீதியில் மின்சாரம் தடைப்பட்டது.

எவ்வாறாயினும், சுமார் 6 மணித்தியாலங்களுக்குப் பின்னர் மின் விநியோகம் வழமைக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் அமைப்பில் ஏற்பட்ட சமநிலையின்மை காரணமாக வெள்ளிக்கிழமை இரவு வரை நாட்டின் பல பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. எனினும், சனிக்கிழமை காலைக்குள் மின்சார விநியோகம் முழுமையாக வழமைக்குத் திரும்பியதாக மின்சார சபை தெரிவித்திருந்தது.

இந்நிலையில், நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகள் வழமைக்கு திரும்பும் வரை நாட்டின் சில பகுதிகளில் ஒரு மணித்தியால மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்படலாம் என மின்சார சபை அறிவித்திருந்தது.

இரவு 6 மணி முதல் 9 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நேற்று முதல் நான்கு நாட்களுக்கு ஒரு மணித்தியால மின் வெட்டு அமுல்படுத்தப்படக்கூடும் என்று ஏற்கெனவே அறிவிக்கபட்டிருந்த நிலையிலேயே இன்று, நாளை மட்டும் மின்விநியோகம் தடைப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரியந்தவின்....

இதேவேளை, பாகிஸ்தானிலுள்ள அனைத்து இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்நாட்டு உயர்ஸ்தானிகருக்கு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளதென இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய, பிரியந்த குமார தியவடனவின் சம்பவத்தை அடிப்படையாக வைத்து பாகிஸ்தானில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்புக்கு எந்தவிதமான அச்சுறுத்தல்களும் ஏற்படாதவாறு இருக்க அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் தெரிவித்தார்.

## மொட்டு எம்.பிக்கள்...

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, நாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு, ஏற்படாது என்றார்.

## ஒத்துழைப்பு வழங்குங்கள்

அதிகப்படியான உயிர்களைக் காப்பாற்றுவது என்பதை விலை மதிக்க முடியாவிட்டாலும், தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதற்கு உலகம் முழுவதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக அதிக செலவை ஏற்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

பொருளாதாரச் செயற்பாடுகளின் மந்தகதியால், உலகளாவிய சுற்றுலா, வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்ற கடுமையான சவால்களை எதிர்கொண்டுள்ளன என்று தெரிவித்த ஜனாதிபதி, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு வல்லரசு நாடுகளால் வழங்கப்படும் ஒத்துழைப்புகளால் மாத்திரமே, அவ்வாறான சவால்களை எதிர்கொள்ள முடியும் என்றார்.

அனைத்துப் பிரஜைகளுக்கும் தடுப்பூசி ஏற்றப்படும் வரையில், கொவிட் - 19 தொற்றுப் பரவல் இல்லாமல் போகப்போவதில்லை என்று தெரிவித்த ஜனாதிபதி, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு, வல்லரசு நாடுகள் உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

உலகளாவிய தொற்றுப் பரவலைத் தடுக்கும் வேலைத்திட்டத்துக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தலைமைத்துவம் வழங்கி வருகின்ற போதிலும், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளின் பொருளாதார மீட்சிக்கு, எந்தவோர் உலக அமைப்பும் உதவ முன்வரவில்லை.

தொற்றுப் பரவலென்பது, வறிய மற்றும் வல்லரசு நாடுகளை ஒரே விதத்தில் பாதிப்படையச் செய்திருப்பினும், விகிதாசாரப் பாதிப்பின் சுமைகளை வறிய நாடுகளே தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடனால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரங்களுக்கு இது மிகவும் கடினமான சந்தர்ப்பமாகும் என்று எடுத்துரைத்த ஜனாதிபதி, தொற்று நோயால் மேலும் பாதிக்கப்பட்டுள்ள வறிய நாடுகளுக்கு கடன் மன்னிப்பு வழங்கல், மறுசீரமைப்பை மேற்கொள்ளல் அல்லது கடன் நிவாரணக் காலங்களை வழங்க வல்லரசு நாடுகளும் பலதரப்பு நிறுவனங்களும் நடவடிக்கை எடுத்தால், அது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்குமென்றார்.

தொற்றுநோய் அனுபவத்தின்படி, ஒரு நாட்டில் உள்ள பாதகமான நிலைமைகள், விரைவாக பிராந்தியத்துக்கும் இறுதியில் உலகம் முழுவதும் பரவக்கூடும். அதனால்தான், தொற்றுநோய்கள், பொருளாதாரம் அல்லது சூழலியல் விடயங்களில் நாடுகளைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க பிராந்தியத்தில் உள்ள நாடுகள் மற்றும் ஒட்டுமொத்தமாக உலகம் முழுவதும் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

*X-Press* பேர்ள் பேரழிவு என்பது, ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல. MT New Diamond கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல், கூட்டு முயற்சியால் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்விரு சம்பவங்களும் சுட்டிக்காட்டக் காரணம், அபாயகரமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்களை கடற்பரப்புக்குள் கொண்டுசெல்வதில் கடுமையான கட்டுப்பாடுகளின் அவசரத் தேவை காணப்படுவதால் ஆகுமென்றும் ஜனாதிபதி விளக்கினார்.

இந்து சமுத்திரப் பிராந்தியமானது, மனிதக் கடத்தல்கள், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச்செயல்களின் நிலையமாகக் காணப்படுவதை ஏற்றுக்கொண்டாக வேண்டுமென்று தெரிவித்த ஜனாதிபதி, போதைப்பொருள் வியாபாரமானது, பிராந்திய நாடுகளுக்குப் பிரச்சினையாக மாறியுள்ளதென்றும் புலனாய்வுப் பிரிவுகள், கரையோரப் பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் பிராந்திய நாடுகளின் கடற்படையினர் இடையேயான ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மூலமாகவே இதனை வெற்றிகரமாக முறியடிக்க முடியுமென்றும் குறிப்பிட்டார்.

மனிதக் கடத்தல்களைக் கட்டுப்படுத்தவும், இவ்வாறானதொரு நடவடிக்கையும் ஒருங்கிணைவும், ஒத்துழைப்புமே அவசியமாகவுள்ளது என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு தற்போது பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ள மத அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளை முறியடிப்பதற்கும், இவ்வாறான ஒருங்கிணைப்பே தேவைப்படுகின்றது என்றும் இது தொடர்பில் மிகக் கவனமாகக் கண்காணித்து இல்லாதொழிக்கவில்லையாயின், அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் போன்றன சுலபமாக இன்னுமோர் இனத்தை நோக்கிச் செல்ல வாய்ப்புள்ளது என்றும் குறிப்பிட்டார்.

## அரசியல்வாதிகளுக்கு அக்கறை இல்லை

அம்மக்கள் வாக்களிப்பது தொடர்பில் கோரப்படவில்லை என்றும் அவ்வாறு வாக்குரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டால் அது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்றும் அணைக்குழு தெரிவித்துள்ளது.

அரச அலுவலர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளின் கலந்துரையாடல், யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று (05) காலை இடம்பெற்றது.

வாக்குரிமை விழிப்பூட்டல்களை மக்கள் மத்தியில் மேற்கொள்வதற்கான 2022-2025 வரையான காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளும் வகையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

## 5 பிள்ளைகள் காட்டில்;

அந்த பிள்ளைகள் ஐவரும் கடந்த இரண்டு நாட்களாக எவ்விதமான உணவுமின்றி இருந்துள்ளனர் என அறியமுடிகின்றது. அந்த பிள்ளைகளில் சிறியவருக்கு 2 வயதெனவும் பெரிய பிள்ளைக்கு 12 வயதெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிள்ளைகளின் தந்தை மதுபோதைக்கு அடிமையானவர். அன்றையநாள் மதுபோதையில் வந்திருந்த கணவன், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளார். அவர், கட்டிலில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த போதே, தன்னுடைய ஐந்து பிள்ளைகளையும் அழைத்துச் சென்ற 35 வயதான தாய், காட்டில் தவிக்க பிட்டுவிட்டு, முறையற்ற காதலுடன் தப்பியோடிவிட்டார்.

பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட பிள்ளைகள் ஐவரும் நன்னடத்தை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்படும் வரையிலும் அப்பிள்ளைகளின் பெரிய தாயாரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஒமிக்ரான் பெண்...

அதன்படி கடந்த 24ஆம் திகதி இலங்கை வந்த அவர், 25ஆம் திகதி வீடு திரும்பியதாகவும், 9 நாள்களின் பின்னர் வெள்ளிக்கிழமையன்று, பிரதேச சுகாதார அதிகாரிகளுக்கு அவர் தொடர்பில் ரியவந்ததாகவும் இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

அறிகுறி இல்லாத காரணத்தால் மருத்துவ கண்காணிப்பின் கீழ் சிகிச்சைக்காக வீட்டுக்கு அனுப்பப்பட்ட போதிலும், பிரதேசத்தின் பொது சுகாதார பரிசோதகர் அல்லது பிரதேசத்துக்கு பொறுப்பான வைத்திய அதிகாரிக்கு அவர் தொடர்பில் அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

கடந்த 25ஆம் திகதி அவரைப் பார்க்க பலர் வந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். பி.சி.ஆர் மாதிரிகளைப் பெறுவதற்கு தொற்றுநோய் பிரிவு தமக்கு அறிவிக்கும் வரையில், பொதுச் சுகாதாரப் பரிசோதகரோ அல்லது சுகாதார வைத்திய அதிகாரியோ தமது பிரதேசத்தில் இருப்பது தனக்கு தெரியாது என்றும் அப்பெண் குறிப்பிட்டுள்ளார்.

நைஜீரியாவில் ஒரு மாதமாக மத மாநாட்டில் கலந்து கொண்ட தனக்கும் தனது கணவருக்கும் கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி எதுவும் கிடைக்கவில்லை என்றும், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள் பி.சி.ஆர் மாதிரி பெறச் சென்றபோதும் அவர்கள் முகக்கவசம் அணியவில்லை என்றும் ரோஹன சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான சூழ்நிலைகளைத் தடுப்பதற்கு நிறுவனங்களுக்கிடையேயான உறவுகளைப் பேணுவதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளாவிட்டால், ஒமிக்ரான் வைரஸ் பரவுவதைத் தடுக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மரணங்கள் அதிகரிப்பு

கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பெண் ஒருவரே நேற்று முன்தினம் (04) இரவு இவ்வாறு மரணித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த பெண், குறிஞ்சாக்கேணி பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயாரான சக்கரிய்யா காலிஸா (42) என அடையாளம் காணப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த நவம்பர் மாதம் 23ஆம் திகதி குறிஞ்சாக்கேணி படகுப்பாதை கவிழ்ந்ததில் நீரில் மூழ்கிய நிலையில் இப்பெண் மீட்கப்பட்டு, கிண்ணியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலைக்கும் பின்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கும் அனுப்பப்பட்டிருந்த நிலையில் அங்கு சிகிச்சை பெற்று வந்த பெண், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பெண்ணின் சடலம், உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## குண்டு வெடிப்பு: ஒருவர் பலி

கிடைத்த மர்மப் பொருளொன்றை கிரைண்டர் ஒன்றினால், வெட்டிக்கொண்டிருந போதே, நேற்று (05) பிற்பகல் 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில்,சிவலிங்கம் யுவராஜ் (வயது 25) உயிரிழந்துள்ளார். சிவலிங்கம் நிலக்சன் என்ற சிறுவன் படுகாயமடைந்துள்ளார் எனத் தெரிவித்த கிளிநொச்சி பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

வெடிப்பு சம்பவம் இடம்பெற்ற வீட்டை சூழவுள்ள சில பகுதிகளிலும் ஆபத்தான வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது

## கருத்துகளை வெளியிடும் சுதந்திரத்தை நசுக்க முயற்சி

திஸ்ஸ அத்தநாயக்க எம்.பியின் ஆன்மிக பயணத்தின் ஓர் அங்கமாக நுவரெலியா, வலப்பனை நாராங்தலாவ, மைலகஸ்தென்ன ஸ்ரீ தர்மராஜராமய விஹாரையின் விஹாராதிபதியை நேற்று (05) அவர் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

அதன்பின்னர், ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

"தமது கருத்துகளை, நிலைப்பாடுகளை சுதந்திரமாக பாராமன்றத்துக்குள் வெளியிடும் உரிமை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டும். அந்த உரிமையை பயன்படுத்தி கருத்து வெளியிட்ட எம்.பி ஒருவரை தாக்க முற்படுவது, அவருக்கு அச்சுறுத்தல் விடுப்பது என்பன ஏற்புடைய விடயமாக அமையாது. அவற்றைக் கண்டிக்க வேண்டும். அதேபோல பாராளுமன்றத்துக்குள் கடந்த இரு நாள்களாக இடம்பெற்ற சம்பவங்களானவை ஜனநாயக ஆட்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

எதிரணி எம்.பிக்களுக்கு எதிரான அச்சுறுத்தலை ஏற்கமுடியாது. எனவேதான், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்வரை சபை அமர்வுகளை புறக்கணிப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். அதற்கான நடவடிக்கை எவ்வாறு இடம்பெறும் என்பதை கட்சியின் பாராளுமன்றக்குழு தீர்மானிக்கும் என்றார்.

## சங்கரியை சந்தித்து சம்பிக்க பேச்சு

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

## மனிதாபிமானமற்ற சூழலில் மலையக தொழிலாளர்கள்

'தற்கால அடிமைத்தன வடிவங்கள் இனப் பரிமாணத்தைக் கொண்டுள்ளன. குறிப்பாக, 200 ஆண்டுகளுக்கு முன்னர் தோட்டத் துறையில் பணியாற்றுவதற்காக இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மலையக தமிழர்கள் - அவர்களின் தோற்றத்தின் அடிப்படையில் பல்வேறு வகையான பாகுபாடுகளை தொடர்ந்து எதிர்கொள்கின்றனர்" என சமகால அடிமைத்தனம் தொடர்பான ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் டொமோயா ஒபோகாடா குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னரும், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்கள் தொடர்பான மனித உரிமைகள் தொடர்பான கவலைகளை ஐ.நா அமைப்புக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

மேலும் சமீபகாலமாக இலங்கையின் முஸ்லிம் சமூகம் துன்புறுத்தல் குறித்த அச்சம் அதிகரித்து வருகிறது, ஆனால் மலையகத்தின் அவல நிலை, வரலாற்று ரீதியாக புறக்கணிக்கப்பட்ட மற்றும் ஓரங்கட்டப்பட்ட தமிழ் சமூகம் சர்வதேச அளவில் ஒப்பீட்டளவில் குறைவான கவனத்தைப் பெற்றுள்ளது.

10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட சமூகத்தைச் சேர்ந்த சுமார் 1.5 லட்சம் பேர் தோட்டங்களில் நேரடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர், அவர்களில் பெரும்பாலோர் பெண்கள். அவர்களின் நாளாந்த ஊதியமான 1000 ரூபாயை சமீபத்திய ஆண்டுகளில் தொடர்ச்சியான போராட்டங்களுக்குப் பின்னர் வென்றனர்.

ஒவ்வொரு நாளும் 18-22 கிலோ தேயிலைக் கொழுந்துகள் பறிக்கப்பட்ட வேண்டும் என்ற கடினமான இலக்குடன் மழை, வெயிலை எதிர்கொண்டு, அட்டை மற்றும் குளவி தாக்குதல்களைத் தாங்கி வேலை செய்கின்றனர்.

ஆடைகள், இறப்பர் மற்றும் மசாலாப் பொருட்களைத் தவிர - இலங்கையின் ஏற்றுமதிக் கூடையில் ஒரு முக்கிய பொருளான தேயிலையானது வருடத்திற்கு சுமார் 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டிற்குக் கொண்டுவருகிறது.

தொழிலாளர்களின் காலனித்துவ கால 10க்கு12 அளவிலான லைன் அறைகளில் 10 பேர் வரை வசிக்கின்றனர், மோசமான சுகாதாரம் மற்றும் சமூகத்துக்கு நில உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்படுவதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

லைன் வீடுகளில் மனிதாபிமானமற்ற மற்றும் இழிவான வாழ்க்கை நிலைமைகள் இன்று வரை நீடிப்பதைக் கண்டு திகைத்துப் போனேன் என்று அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒமிக்ரானைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் தீவிரம்

கண்டியில் நேற்று (05) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது,

புதிய மாறுபாடு தொடர்பில் நிபுணர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பதாகவும், முழுமையான பகுப்பாய்வுக்குப் பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவிப்பார்கள் என்றும் குறிப்பிட்டார்..

எதிர்கால பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டபோது, தற்போதைய சுதந்திரமான இயக்கத்தைத் தொடர, மக்கள் பரிந்துரைக்கப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.




# பவளத்தீவுக்குப் பறக்கலாம்

மாலைத்தீவின் அட்டு பவளத்தீவுக்கு, இலங்கை விமான சேவைகள் நிறுவனம் விமான சேவைகளை மீள ஆரம்பித்துள்ளது.

இதன்படி நேற்று முன்தினம் (04) முதல் இலங்கை விமான சேவைகள் நிறுவனம் ஒவ்வொரு வாரமும் விமான சேவைகளை அட்டு பவளத்தீவுக்கு முன்னெடுக்கவுள்ளது.

UL 119 என்கிற விமானம் சனிக்கிழமைகளில் காலை 10.40 மாலைத்தீவுக்குப் புறப்படும் எனவும், பிற்பகல் 13.05 மணிக்கு மீண்டும் அந்த விமானம் இலங்கைக்கு திரும்பும் எனவும் இலங்கை விமான சேவைகள் நிறுவனம் அறிவித்துள்ளது.

## தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளாது

# ஒமிக்ரானுடன் நுழைந்தது எப்படி?

ஒமிக்ரான் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நைஜீரிய பெண், தடுப்பூசிகள் எதனையும் செலுத்திகொள்ளாது நாட்டுக்குள் எவ்வாறு நுழைந்தார் எனக்கேட்டு, கொரோனா வைரஸ் ஒழிப்புக்குழுவில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முறைப்பாடு செய்யவுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அச்சங்கதின் மத்திய செயற்குழு உறுப்பினர் பிரசாத் கொலம்பகே, நாட்டில் தற்போது அமலிலுள்ள தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கு அமைவாக, இரு தடுப்பூசிகளையும் செலுத்திக்கொள்ளாதவர்கள் நாட்டுக்குள் நுழைய முடியாது. நாட்டுக்குள் நுழைபவர்கள் தொடர்பில் சுகாதாரத் தரப்பினர், பாதுகாப்புத் தரப்பினர் அவதானம் செலுத்த வேண்டும்.

நாட்டுக்குள் நுழைந்த ஒருவருக்கு ஒமிக்ரான் வைரஸ் தொற்றியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளமை நாட்டின் சுகாதாரத்துறைக்கு பாரதூரமான அச்சுறுத்தலாக மாறியுள்ளது. எனவே, இது தொடர்பில் அனைவரும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுகொண்டார்.

# சபுகஸ்கந்த நாளை முதல் வழமைக்கு திரும்புகிறது

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் நாளை முதல் (07) மீண்டும் வழமைக்குத் திரும்பவுள்ளதாக வலு சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

மசகு எண்ணெய் இறக்குமதியை நிறுத்தி வைக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்தைத் தொடர்ந்து நவம்பர் மாதத்தின் முதல் வாரம் முதல், அந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதால் எண்ணெய் சுத்திகரிப்புப் பணிகள் நாளை முதல் மீள ஆரம்பிக்கப்படும் என வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



# முல்லைத்தீவு 3 இராணுவ சிப்பாய்களும் விடுதலை

சண்முகம் தவசீலன்

முள்ளிவாய்க்கால் பகுதியில் ஊடகவியலாளர் மீதான தாக்குதலில் கைதாகிய இராணுவ சிப்பாய் மூவரும், குற்றத்தை ஒப்புகொண்டு மன்னிப்பு கோரியுள்ளனர். இதனையடுத்து, முறைப்பாட்டாளரின் சம்மதத்துடன் அம்மூவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரி முன்னிலையில் குற்றத்தை ஒப்புகொண்டு மன்னிப்பு கோரியுள்ள நிலையிலேயே கடந்த 30 ஆம் திகதி அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில், பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் மேலும் தெரிவித்ததாவது

இராணுவத்தினர் என் மீது தாக்குதலை மேற்கொள்ளவில்லை என்பது உண்மைக்கு புறம்பானது, மோட்டார் சைக்கிளில் இருந்தவாரே முள்ளிவாய்கால் பெயர் பலகையை ஒளிப்படம் எடுத்த என்னை நோக்கி வந்த இராணுவ சிப்பாய், “ ஔா கௌத” (நீ யார்) என்று கேட்டார். நான், பதிலளிக்கும் முன்பே என்மீது தாக்குதலை தொடுத்தார்.

அச்சந்தர்ப்பதில், சுதாகரித்து கொண்ட நான் குறித்த சிப்பாயின் தாக்குதலில் இருந்து தப்பிக்க ஒளிபதிவு செய்தவாரே மோட்டர் சைக்கிளில் இருந்து பின்பக்கமாக இறங்கி பின் நகர்ந்தேன்.

குறித்த சிப்பாய் என்னை நோக்கி வந்தவாரே தொலைபேசி அழைப்பு ஒன்றை ஏற்படுத்தி உரையாடிக்கொண்டு வந்தார்.

பின்னர் அவர் என்மீது தாக்குதலை தொடுத்த சந்தர்ப்பத்தில், சீருடை அணியாத மேலும் இரண்டுபேர் பச்சைமட்டை மற்றும் கைகளாலும் காலினாலும் தாக்குதலை தொடுத்தனர். அவ்விருவரும் இராணுவ சிப்பாய்களென இனங்கண்டுகொண்டேன்.

ஆரம்பத்தில் என்னை தாக்கிய, முதலாவது இராணுவ சிப்பாய், தான் தாக்கும் காட்சிகள் அடங்கிய ஆதாரத்தை அழிக்கும் நோக்கத்தில் எனது ஒளிப்பதிவு கருவியை பறிப்பதை நோக்கமாக கொண்டே உதவிகளுக்கு இரண்டு இராணுவ சிப்பாய்களை அழைத்து மீண்டும் என்மீது தாக்குதலை தொடுத்தார்.

(சம்பவம் எனது மோட்டர் சைக்கிள் நின்ற இடத்தில் இருந்து சுமார் 30 மீற்றர் துரத்தில் நடைபெற்றது.)

கண்முடித்தனமாக என்மீது இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்ட போதும் எனது ஒளிப்பதிவு கருவியை நான் கைவிட மறுத்து பிடிவாதமாக நின்றதால். என் மீதான மல்லுக்கட்டலும் தாக்குலும், 20 நிமிடங்கள் தொடர்ந்தது இதன் விளைவாக அருகில் இருந்த முற்கம்பிவேலிக்குள் என்னை இராணுவ சிப்பாய்கள் சிக்க வைத்தனர்.

# மாமாவை அடித்துகொன்ற பொலிஸ் சார்ஜண்ட் கைது



களுத்துறை, கொஹோலான ஹெட்டிகொட பிரதேசத்தில் தனது மாமனாரை அடித்துக் கொன்றதாகக் கூறப்படும் பொலிஸ் சார்ஜன்ட் கைது செய்யப்பட்டுள்ளார்.

72 வயதுடைய குணசேன அடிகாரம் என்ற நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பொலிஸார், இச்சம்பவம் தொடர்பில் ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்டே கைது செய்யப்பட்டுள்ளார் என்றனர்.

சந்தேகநபரும், கொலை செய்யப்பட்ட நபரும் ஒரே வீட்டில் வசித்து வருகின்றனார். இருவருக்கும் இடையில் ஏற்பட்ட நீண்ட நேர வாக்குவாதமே கொலைக்குக் காரணமென ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதென பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரான மருமகன், தனது மாமனாரை கடுமையாக தாக்கியுள்ளதோடு காயங்களுக்குள்ளான அவரை வைத்தியசாலையில் அனுமதிக்காது ஒரு மணிநேரத்துக்கும் கூடுதலாக வீட்டில் தடுத்து வைத்துள்ளார்.

எனினும், தாக்குதலுக்கு உள்ளானதை கேள்வியுற்று, வீட்டுக்கு அருகில் உள்ளவர்களும் உறவினர்களும் அந்நபரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும், அவர் உயிரிழந்துவிட்டார்.

# ஐ.ம.முவில் புதிய நியமனம்



கட்சியை சாத்தியமான அனைத்து மாவட்டங்களிலும் பலப்படுத்துவதுடன், ஜனநாயக மக்கள் முன்னணியில் அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணியை ஏனைய பங்காளி கட்சிகளுடன் இணைந்து பலமான தேசிய அரசியல் இயக்கமாக கட்டி எழுப்பும் நோக்கில் கடுமையாக உழைக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழுவில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கட்சி தலைவர் மனோ கணேசன் தலைமையில் கொழும்பு பிரைட்டன் விடுதியில் நேற்று (05) நடைபெற்ற அரசியல் குழு கூட்டத்தின் போது, புதிய பதவி நியமனங்கள் வழங்கப்பட்டு, கட்சி மற்றும் கட்சி உள்ளடங்கும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் வளர்ச்சி தொடர்பில் பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி ஊடக செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: கட்சியின் செயலாளர் நாயகமாக பணி செய்து வந்த கட்சியின் முன்னாள் மேல் மாகாணசபை உறுப்பினர் கே. டி. குருசாமி, கட்சியின் பொது செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் உப தலைவராகப் பணி செய்து வந்த கட்சியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சி. பாஸ்கரா, சிரேஷ்ட உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் புதிய இரண்டு இணை உப தலைவர்களாக எம். சந்திரகுமார், எஸ். சசிகுமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கட்சியின் பதவி நிலை வகிபாகங்கள் மீண்டும் அரசியல் குழுவால் அங்கிகரிக்கப்பட்டன. அதன்படி கட்சியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர் எம். வேலு குமார், தேசிய அமைப்பாளர் பிரகாஷ் கணேசன், நிர்வாக செயலாளர் பிரியாணி குணரத்ன, தவிசாளர் ஏ. ஜெயபாலன், நிதி செயலாளர் எஸ். கணேசன், சிரேஷ்ட உப தலைவர் சி. பாஸ்கரா, இணை உப தலைவர் எம். சந்திரகுமார், இணை உப தலைவர் எஸ். சசி குமார், பிரசார செயலாளர் எம். பரணிதரன், மகளிர் விவகார செயலாளர் மஞ்சுளா பெருமாள், இளைஞர் விவகார செயலாளர் ஜி. விஷ்ணுகாந்த் ஆகிய பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து, எம். பால சுரேஷ் குமார், லோரன்ஸ் பெர்னாண்டோ, ஆர். கமலேஸ்வரன், எசக்கி குமார் ஜெயராமன், எம். பரமசிவம், எஸ். இருளப்பன், எஸ். பாலச்சந்திரன், எம். அன்டனி ஜெயசீலன் ஆகியோரும் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் மாவட்ட அமைப்பாளர்களாக, எம் பால சுரேஷ் குமார்-கொழும்பு, எஸ். சசி குமார்-கம்பஹா, எம். பரமசிவம்-கண்டி, எம். சந்திரகுமார்-இரத்தினபுரி, எம். பரணிதரன்-கேகாலை, எம். அன்டனி ஜெயசிலன்-களுத்துறை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். பெயர் குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் உடனடியாக உட்கட்சி கட்டமைப்பு பணிகளை துரிதப்படுத்துமாறு அமைப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். மாத்தளை, புத்தளம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு விரைவில் அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவது தொடர்பிலும்கலந்துரையாடப்பட்டது.

## ஊடகவியலாளர் மீது தாக்குதல்:

# நீர்கொழும்பிலும் ஆர்ப்பாட்டம்

ஷாஜஹான்

முல்லைதீவு ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வசந்திரன் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து, நீர்கொழும்பு மணிக்கூட்டு கோபுரம் அருகே நேற்றுமுன்தினம் (04) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நீர்கொழும்பு ஊடகவியலாளர் அமைப்பு, தொழில்சார் இணைய ஊடகவியலாளர் சங்கம், கம்பஹா மாவட்ட ஊடகவியலாளர் அமைப்பு மற்றும் சிவில் சமூகத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர்.

நீர்கொழும்பு ஊடகவியலாளர் அமைப்பினர் இதனை ஏற்பாடு செய்திருந்ததுடன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தி இருந்ததோடு எதிர்ப்பு கோஷங்களையும் எழுப்பினர். மணிக்கூட்டுக்கோபுரம் அருகில் இருந்து சிறிது தூரம் பேரணியாகவும் சென்றனர்.





# ஐ.நா விசேட அறிக்கையாளரிடம் மலையக அரசியல் அரங்கம் மனு

மலையகப் பெருந்தோட்ட மக்கள் கடந்த 200 வருடங்களாக காணி, வீடு, கல்வி உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதில் இருந்து திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்படுவதாக மலையக அரசியல் அரங்கம் தெரிவித்துள்ளது.

ஏனைய சமூகங்களில் இருந்து பாரபட்சமான முறையில் மலையக சமூகத்தினர் நடத்தப்படுவதாகவும், இது அரை அடிமைத்தனத்துக்கு ஒப்பானதென தெரிவித்து, அடிமைத்தனத்துக்கு எதிரான ஐ.நா விஷேட அறிக்கையாளரான டொமொயா ஒபோகாட்டாவிடம் எழுத்துமூல கோரிக்கை மனுவொன்றை அவ்வமைப்பு கையளித்துள்ளது.

மலையக மக்களின் இந்நிலைமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டுமென மலையக அரசியல் அரங்கம் வலியுறுத்துகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்த அந்த அரங்கத்தின் செயலாளர் நா.கிருஷ்ணகுமார், ஏதேனும் வடிவத்தில் அடிமைகள் போன்று நடத்தப்படும் மக்கள் சமுதாயத்தினர் இலங்கையில் இருப்பார்களாயின் அவர்கள் குறித்த விவரங்களைப் பெற்று ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கையிடும் பணியினை மேற்கொள்ளவே விஷேட அறிக்கையாளர் டொமொயா ஒபகாட்டோ இலங்கை வருகை தந்திருந்தார்.



இலங்கையில் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களாக கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக நாட்கூலி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் காணி உரிமை மறுக்கப்பட்டு கல்வியிலும் பாரபட்சம் காட்டப்படுவதை நாம் சுட்டிகாட்டியுள்ளோம். இதனால், குடும்ப வறுமை , சிறுவர் தொழில், பெண்கள் உரிமை பாதிப்பு, இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு இல்லாமை போன்ற மாறுபட்ட பிரச்சினைகள் தோன்றி, சிறுவர் - பெண்கள் துஷ்பிரயோகம், மரணம் முதலான இன்னல்களுக்குள் தோட்டத் தொழிலாளர் சமூகம் தள்ளப்படுவதாகவும் எமது எழுத்து மூல ஆவணத்தில் பதிவு செய்து விஷேட அறிக்கையாளரிடம் கையளித்தோம் என்றார்.

## புத்தளத்தில் ஐந்து நாள்களில்

# ஐந்து அடுப்புகள் வெடித்துச் சிதறின

ரஸீன் ரஸ்மீன்



சமையல் எரிவாயு கசிவு காரணமாக, கடந்த ஐந்து நாள்களில் புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட மூன்று பொலிஸ் பிரிவுகளில் ஐந்து வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என, புத்தளம் பொலிஸ் தடயவியல் பிரிவினர் தெரிவித்தனர்.

இதில் நான்கு வீடுகளிலும், உணவகம் ஒன்றிலும் இவ்வாறு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதன்படி, புத்தளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சோல்ட்டன், நிந்தனி, உடப்பு பொலிஸ் பிரிவில் சின்னப்பாடு, கற்பிட்டி பொலிஸ் பிரிவில் மணல் தோட்டம் ஆகிய பகுதிகளிலுள்ள நான்கு வீடுகளிலும், கரம்பை பகுதியிலுள்ள உணவகத்திலும் காஸ் அடுப்புகள் வெடித்துள்ளன.

மேற்படி வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற வீடுகளுக்கும், உணவகத்துக்கும் சென்று ஆய்வுகள், விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் புத்தளம் பொலிஸ் தடயவியல் பிரிவினர் மேலும் தெரிவித்தனர்.

# கூரிய ஆயுதங்களால் தாக்கி ஒருவர் கொலை

## பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பீர் சய்பூ வீதியில் பயணித்த நபரை காரில் வந்த நபர்கள், கூரிய ஆயுதங்களைக் கொண்டு தாக்கிக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ள சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் (04) இடம்பெற்ற இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நபரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கொலை செய்யப்பட்டுள்ள நபர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கும் பொலிஸார், இரு தரப்பினருக்கு இடையிலான மோதலால் இக்கொலை சம்பவம் நடைபெற்றிருக்கலாம் எனவும் சந்தேகிக்கின்றனர்.

தேவை

இல்லத்தரசிகள்/ பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் மற்றும் வீட்டிலிருந்தே வேலை செய்ய ஆர்வமுள்ளவர்கள் மாதம் ரூ.50,000 வரை கூடுதல் வருமானம் பெறலாம். வார நாட்களில் காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரை தொடர்புகொள்ளவும். 0112-686 554

இல.1/110A, Cotta Road, borella. Colombo08-

கிளிநொச்சி மக்களை

# சம்பிக்க சந்தித்தார்

## குறைகளையும் கேட்டறிந்தார்

சுப்ரமணியம் பாஸ்கரன்



பெருந்தெருக்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி முன்னாள் அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க, கிளிநொச்சிக்கு நேற்று (05) விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கிளிநொச்சி, பரந்தனின் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில், கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து அழைக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடலில் அவர் ஈடுபட்டார்.

மக்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் குறிப்பாக பசளை, வீடு உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் அவரிடம் முன்வைத்தனர்.

அவற்றுக்குப் பதிலளித்த சம்பிக்க, குறித்த பிரச்சினைகள் தொடர்பில் எழுத்து மூலமாகத் தருமாறும், அதற்குப் பொருத்தமானவர்களுக்குத் தகவலை வழங்கி, தீர்வு பெற்றுத் தருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மாவட்ட அமைப்பாளர் சீலனின் வேண்டுகோளுக்கு அமைவாக கிளிநொச்சி, சிவபுரம் கிராமத்துக்கும் சென்று அப்பகுதி மக்களின் பிரச்சினைகளையும் பாட்டாளி சம்பிக்க ரணவக்க கேட்டறிந்து கொண்டார். இதன்போது, வெள்ள அனர்த்தம் ஏற்படுதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை மக்கள் அவரிடம் முன்வைத்தனர்.

பாடசாலையில் கொள்ளை;

## 16 வருடங்களின் பின்னர் ஒருவர் கைது

எஸ். தில்லைநாதன்

16 வருடங்களுக்கு முன்னர் பாடசாலைஒன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் நபரொருவர், நெல்லியடி பொலிஸாரால் நேற்று முன்தினம் (04) கைது செய்யப்பட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டு, கரணவாய் மகா வித்தியாலயத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்த காவலாளியைக் கட்டி வைத்து விட்டு, கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

அது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் அப்போது முறைப்பாடு செய்யப்பட்டு, 16 வருடங்கள் கடந்த நிலையில், வடமராட்சி வல்லைப் பகுதியில் வைத்து மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒருவரை, நெல்லியடி பொலிஸார் தற்போது கைது செய்துள்ளனர்.

புதைக்கப்பட்டிருந்த

## துப்பாக்கி, ரவைகள் மீட்பு

செ.கீதாஞ்சன்

யுத்த காலத்தின் போது, முல்லைத்தீவு, அம்பலவன் பொக்கணைப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஏகே47 துப்பாக்கி, மகசின்கள் 4, துப்பாக்கி ரவைகள் 210 என்பன மீட்கப்பட்டுள்ளன.

இவை, நேற்று முன்தினம் (04) மாலை மீட்கப்பட்டு, முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதாக, மனிதக் கொலை மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவின் கீழ் உள்ள பிரிவு தெரிவித்துள்ளது.



## மன்னாரிலும் அடுப்பு வெடித்தது

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார், சாந்திபுரம் பகுதியில் வீடு ஒன்றில் நேற்று முன்தினம் (04) இரவு 10 மணி அளவில் கேஸ் அடுப்பு தீப்பற்றி எரிந்தது.

கடந்த வாரம் கொள்முதல் செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டர் ஊடாக, இரவு நேர சமையல் மேற்கொண்ட நிலையில் திடீரென அடுப்பு முழுவதும் தீ பற்றியதுடன், சிறிது நேரத்தில் அடுப்பு முற்று முழுதாக வெடித்ததாகவும் உடனடியாக சிலிண்டரை அப்புறப்படுத்தியமையால் பாரிய தீ விபத்து தடுக்கப்பட்டதாகவும் உரிய வீட்டார் தெரிவித்தனர்.

அதே நேரம், தீப்பற்றிய வீட்டில் சமையல் எரிவாயு சிலிண்டரிலோ, ரெகுலேட்டர்களிலோ, வயர்களிலோ எந்தத் தீ பரவலும் ஏற்படவில்லை என்பதுடன், அடுப்பு மட்டுமே தீ பற்றி எரிந்ததுடன் வெடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் பலி

### வானத்தை நோக்கி சுட்ட பொலிஸார்

எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் (04) இரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தையடுத்து அப்பகுதியில் பொதுமக்களிடையே அமைதியின்மை ஏற்பட்டமையால், பொலிஸார் வானத்தை நோக்கிச் சுட்டு, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மானிப்பாய், கைத்தடி வீதி, உரும்பிராயில் வானும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் சைக்கிளில் பயணித்த உரும்பிராய், அன்னங்கை பகுதியைச் சேர்ந்த குணசிங்கம் சுதன் (வயது 45) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதனை அடுத்து அங்கு கூடிய பொதுமக்கள், மல்லாகத்தை சேர்ந்த வான் சாரதியை பிடித்து நயப்புடைத்துள்ளனர். அதனால் அப்பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் அறிந்த பொலிஸார், சம்பவ இடத்துக்குச் சென்ற போது, பெருமளவானோர் ஒன்று கூடி அமைதியின்மையை ஏற்படுத்தி இருந்தனர். அதனால் பொலிஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

விபத்தில் உயிரிழந்த நபரின் சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்ததுடன், வான் சாரதியை கைது செய்து, வானையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.




வைத்தியசாலைக்கு

## சுகாதார பொருட்கள் அன்பளிப்பு

இலங்கை ஹோட்டல் பட்டதாரிகளின் சங்க உறுப்பினர்களின் அனுசரணையுடன், முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தால், ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு சுகாதாரப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் சஞ்சய வனசிங்க சார்பில், 64ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் உபுல் வீரகோன் வைத்தியசாலைக்கு சென்று இவற்றைக் கையளித்தார்.

மெத்தைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், துடைப்பான், ஆடைகள் என்பன இவற்றில் உள்ளடங்கியிருந்தன.

ஆறு சடலங்களை அடுத்து இந்தியரின்

## சாரதி அனுமதிப்பத்திரம் கரை ஒதுங்கியது

எஸ். தில்லைநாதன்




வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்கரை பகுதியில் நேற்று (05) காலை இந்திய பிரஜை ஒருவரின் சாரதி அனுமதிப்பத்திரம் கரையொதுங்கியது.

தமிழகத்தின் ஆலம்பத்தூர், சிதம்பரம் தாலுகாவை சேர்ந்த ஆனந்தகுமார் பரமசிவம் (வயது 47) என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரமே இவ்வாறு கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வட பகுதிக் கடலில் ஆறு நாள்களுக்குள் இனந்தெரியாத ஆறு சடலங்கள் கரை ஒதுங்கின. நவம்பர் மாதம் 27ஆம் திகதி மணற்காடு, வல்வெட்டித்துறை கடற்கரைகளில் இரு சடலங்களும், மறுநாள் நெடுந்தீவில் ஒரு சடலமும், 30ஆம் திகதி வெற்றிலைக்கேணியில் ஒரு சடலமும், வியாழக்கிழமை (02) பருத்தித்துறையில் 02 சடலங்களும் கரையொதுங்கின.

பாகிஸ்தானில் இலங்கையர் கொல்லப்பட்டமை

# மிலேச்சத்தன செயலாகும்

## கல்முனை மேயர் பலத்த கண்டனம்

அஸ்லம் எஸ்.மௌலானா



பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை மிலேச்சத்தனமான செயலாகும் எனத் தெரிவித்துள்ள கல்முனை மாநகர மேயர் ஏ.எம்.றகீப், இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் இதன் பின்னணி குறித்து புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்று (05) அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

பாகிஸ்தானில் தொழில் நிறுவனமொன்றில் நீண்ட காலமாக முகாமையாளராக கடமையாற்றி வந்த எமது நாட்டுப் பிரஜை ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு, எரித்துப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

முஸ்லிம் நாடொன்றில் இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதானது இலங்கை வாழ் முஸ்லிம்களாகிய எமக்குப் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த மிலேச்சத்தனமான சம்பவத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிகின்றோம்.

தமது நாட்டில் பணியாற்றுகின்ற வெளிநாட்டுத் தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டியது, குறித்த நாட்டு அரசாங்கத்தின் பொறுப்பாகும். அந்தவகையில் பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ள சம்பவத்துக்கு அந்நாட்டுப் பிரதமர் எமது நாட்டு ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு, குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அதிகபட்ச தண்டனை வழங்கப்படுமென உறுதியளித்திருக்கின்றார். இது எமது நாட்டு மக்களுக்கு ஆறுதலான விடயமாகும்.

பாகிஸ்தானின் இறைமைக்கும் புகழுக்கும் மாசு கற்பிக்கும் நடவடிக்கையாக இந்தச் சம்பவம் அமைந்திருக்கிறது. ஆகையால், இதன் பின்புலம் குறித்து ஆராயப்பட்டு, உண்மை நிலைவரம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.





வெளிநாட்டு பறவைகளின்

## படையெடுப்பு ஆரம்பம்

பாறுக் ஷிஹான்



அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, மத்தியமுகாம், சவளக்கடை, நற்பிட்டிமுனை பிரதேசங்களில் உள்ள நீர் நிலைகளை நாடி வெளிநாட்டு பறவை இனங்கள் தற்சமயம் வருகை தருகின்றன.

இப்பறவைகள் சுமார் 2,000 மைல் தூரம் பறந்து செல்லும் வல்லமை படைத்தவை. அவுஸ்திரேலியா, சுவிஸ்சர்லாந்து, ரஷியா, ஜெர்மனி, பிலிப்பைன்ஸ், நைஜீரியா, சைபிரியா ஆகிய நாடுகளிலிருந்து டிசெம்பர் மாதத்தில் இங்கு வருகின்றன.

இவற்றில், செங்கால் நாரை, பூநாரை, கூழைக்கடா, கடல்காகம், கூழைக்கடா, பாம்புத்தாரா, சாம்பல்நாரை, வெட்டிவாயன், கரண்டிவாயன், வெள்ளை அரிவாள் மூக்கன், நாரை இனங்கள், அன்னப்பறவை உள்ளிட்ட கொக்கு இனங்கள் காணப்படுகின்றன.

இவை இங்கேயே கூடு கட்டித் தங்கி, முட்டையிட்டு, குஞ்சு பொரித்து, குஞ்சுகளுக்குப் பறக்கக் கற்றுக்கொடுத்து, மார்ச் மாத இறுதியில் புதிய குடும்பமாய் தமது சொந்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வது வழமையாகும்.

இந்த வெளிநாட்டுப் பறவைகள் யாவும் இயற்கை சூழலைப் பாதுகாப்பதிலும் வேளாண்மை செய்கைக்கு உதவுவனவாகவும் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரயிலில் மோதி ஒருவர் உயிரிழப்பு



கனகராசா சரவணன், வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு, திராய்மடுவில் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதான கந்தையா அசோக்குமார் என்பவர் ரயிலில் மோதி, நேற்று (05) அதிகாலை உயிரிழந்துள்ளார் என மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி, அதிகாலை 5.45 மணிக்குச் சென்ற ரயிலுடன் இவர் மோதியுள்ளார் எனவும் உயிரிழந்தவர் மதுபோதையில் இருந்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



15 வருடங்களாகப் பயன்படுத்திய

## வீதியை மூடியமைக்கு பொதுமக்கள் எதிர்ப்பு

எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, கிரான்குளம், அமரபுரம் கிராமத்தில் 15 வருடங்களாகப் பயன்படுத்தி வந்த கிரான் குளம்- புதுக்குடியிருப்பு வீதியை இரண்டு மாதங்களாக பலவந்தமாக மூடி வைத்திருப்பதற்கு பொதுமக்கள் கடும் எதிர்த்துத் தெரிவித்துள்ளனர்.

அந்த வீதியைத் திறந்து, மக்களின் வீதிப் போக்குவரத்துக்கு வழி செய்யுமாறு, கிரான்குள பிரதான வீதியிலுள்ள ஸ்ரீ மஹா விஷ்ணு கோவிலுக்கு முன்பாக நேற்று (05) பொதுமக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

காணி சீர்திருந்த ஆணைக்குழுவின் அதிகாரி விமல்ராஜ் என்பவரே மேற்படி வீதியை அடைத்து வைத்துள்ளார் எனவும் இதனால் பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இப்பாதையைத் திறந்து தருமாறு கோரியும் அதே போன்று நவம்பர் 28 ஆம் திகதி இப் பிரதேசத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு எதிராகவும் இந்தக் கண்டன கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அத்தோடு, “15 வருடங்களாகப் பயன்படுத்தி வந்த வீதியை அநியாயமாக மூடாதே”, “காணித் திருடனுக்கு காணி ஆணையாளர் பதவியா?”, “அரசே காணித் திருட்டு கும்பல்களை விசாரணை செய்” என்பன போன்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

குற்றங்களுடன் தொடர்புபட்ட

## இருவருக்கு விளக்கமறியல்

எம்.எஸ்.எம். ஹனீபா

பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் மற்றும் 3,320 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரிலும் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா, நேற்று முன்தினம் (04) உத்தரவிட்டார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கைது செய்யப்பட்ட இந்தச் சந்தேகநபர்கள், அக்கரைப்பற்று நீதிமன்றின் கட்டளைக்கமைய 07 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்து வந்ததாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ.எம்.எஸ்.பி. விஜயதுங்க தெரிவித்தார்.

சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது 3,320 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, அவர்களால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய 25 பவுன் தங்க நகைகள் மற்றும் திருட்டுச் சம்பவங்களுக்குப் பயன்படுத்திய ஓட்டோ, திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் 03 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

# பிரதேச சபைகள் அதிகரிப்பை நடைமுறைப்படுத்தாதது ஏன்?

**வர்த்தமானி வெளியிட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன என்கிறார் வேலுகுமார் எம்.பி கேள்வி**

நுவரெலியா மாவட்ட பிரதேச சபைகள் அதிகரிக்கப்பட்டதுடன், இந்த அதிகரிப்புக்கான அரச வர்த்தமானி வெளியிடப்பட்டது. ஆனால், இரண்டு ஆண்டுகள் கடந்தும் பிரதேச செயலக அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளதெனத் தெரிவித்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவாட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார், அது ஏன் என்றும் வினவினார்.

பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், நுவரெலியா மாவட்டத்தின் அரச நிர்வாக அதிகாரப் பகிர்வை, அதனை தொடர்ந்து முன்னெடுத்தோம். அதன்படி, நுவரெலியா மாவட்டத்தில் இருந்த ஐந்து பிரதேச செயலக பிரிவுகளை பத்து பிரதேச செயலகப் பிரிவுகளாக உயர்த்துவதற்கான அரச வர்த்தமானி 2019ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.



அம்பகமுவ பிரதேச செயலகத்தை அம்பகமுவ, நோர்வூட் எனவும், நுவரெலியா பிரதேச செயலகத்தை, நுவரெலியா, தலவாக்கலை எனவும், கொத்மலை பிரதேச செயலகத்தை, கொத்மலை கிழக்கு, கொத்மலை மேற்கு எனவும், வலப்பனை பிரதேச செயலகத்தை, நில்தான்டாயேன, வலப்பனை எனவும், அங்குராங்கெத்தை பிரதேச செயலகத்தை, அங்குராங்கெத்தை, மதுரட்ட எனவும் அதிகரிப்பதற்கு முன்மொழிவு செய்யப்பட்டது.

ஆனால், தற்போது இந்த வர்த்தமானி வெளியிட்டு இரண்டு ஆண்டுகள் கடந்திருக்கின்றன. ஆனால், பிரதேச செயலங்களின் அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இன்று அரசாங்கத்தில் உள்ள மலையக பிரதிநிதிகளுக்கு இதில் அக்கறை கிடையாது. அரசியல் உரிமை பற்றியும் சமூக உரிமை பற்றியும் அவர்களுக்கு எவ்வித நோக்கமும் கிடையாது. சலுகையை பெறுவதிலேயே முண்டியடித்துக்கொண்டு செயற்படுகின்றனர். உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வர்த்தமானியின் படி, பிரதேச செயலகங்கள் அதிகரிப்புக்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன் என்றார்.

# சிவனொளிபாதமலையில் சிரமதானப் பணி

கே.சுந்தரலிங்கம்

சிவனொளிபாதமலை பருவகாலம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால், பருவ காலத்தை யாத்திரிகர்கள் எவ்வித இடையூறுகளும் இன்றி முன்னெடுப்பதற்காக 'சுற்றாடலைப் பாதுகாத்து உயிரைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

மத்திய மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய மாகாணங்களின் தேசிய சேமிப்பு வங்கியின் ஊழியர்களால் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நல்லத்தண்ணீர் முதல் சீத்தகங்குலை வரை இருமருங்கிலும் வீசியெறியப்பட்டிருந்த உக்காத கழிவுகள் அகற்றப்பட்டன.



குறித்த வேலைத்திட்டம், நேற்றுமுன்தினம் (04) மஸ்கெலியா சமன் தேவாலயத்தில் பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டதுடன், சிரமதானப் பணியின் போது சேகரிக்கப்பட்ட கழிவுகள், மஸ்கெலியா பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டன.

# விருது வழங்கி கௌரவம்

ஆ.ரமேஸ்

புத்தசாசன அமைச்சின், சமூக சேவைக்கான லங்கா புத்ர, தேசபந்து விருது, ஹட்டன் எரோல் தோட்டத்தை சேர்ந்த ஒகஸ்டியன் ரொஷானுக்கு வழங்கப்பட்டது.

இவ்விருதினை தம்பகொல்லகே பத்துமசிறி தேரர் அண்மையில் வழங்கிவைத்தார்.

இவ்வாறு விருது பெற்றுக்கொண்ட ரொஷான், ஹட்டன்- எரோல் தோட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட, ஹட்டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியின் பழைய மாணவராவார்.



இவர், ஹட்டன் இளைஞர் கழக தலைவராகவும், அம்பகமுவ பிரதேச நிலையான அபிவிருத்திக்கான இளைஞர் படையணியின் ஒருங்கிணைப்பாளராகவும், பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் ஊடக செயலாளராகவும் இருந்து வருகிறார்.

பெப்ரல் அமைப்பின் தகவலறியும் சட்டம் பற்றிய இணைப்பாளராக, ஹட்டன் சர்வோதய அமைப்பின் இளைஞர் அமைப்பாளராக, சேவையாற்றிய அவர் தற்போது பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியின் ஆசிரிய பயிலுநராக இருக்கின்றார்.

அத்துடன் எ.சி.டி அமைப்பின் இணைப்பாளராக இருந்து மலையக கல்வி அபிவிருத்திக்கும் பங்காற்றி வருகின்றார். இவரின் இளவயது சேவையை பாராட்டி, புத்த சாசன அமைச்சு இவ்விருதை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.










# கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

வைஷ்ணவி நற்பணி மன்றத்தினூடாக யட்டியந்தோட்டை பாரதி தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு, கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(பி. கேதீஸ்)

## பாடசாலை பஸ்ஸை எரித்தவர்

# ஒன்றரை வருடத்தின் பின்னர் சிக்கினார்

என்.ஆராச்சி

தெரணியகல, மாலிபொட, பொத்தெனிகந்த பிரதேசத்தில் தனியார் பாடசாலை ஒன்றுக்குரிய பஸூக்குத் தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒன்றரை வருடங்களுக்கு பின்னர் ஒருவர் சந்தேகத்தின் பேரில், கைதுசெய்யப்பட்டுள்ளார் என தெரணியகல பொலிஸார் தெரிவித்தனர்.

43 வயதான சந்தேகநபர், மாலிபொட, மஹயாய பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார். கடந்தாண்டு, ஜூலை மாதம் 20ஆம் திகதி இரவு, குறித்த பஸ்ஸின் உரிமையாளரின் வீட்டுக்கு அருகில் பஸ் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போது, தீபரவல் ஏற்பட்டு, பஸ் முழுமையாக எரிந்து சாம்பலாகியது.

இந்த நிலையில், தெரணியகல பொலிஸார் தொடர்ச்சியாக முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைய, 3ஆம் திகதி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு, நேற்றுமுன்தினம் (4) அவிசாவளை பதில் நீதவான் சம்பா முதலிகே முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து சந்தேகநபரை இந்த மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



## கொட்டகலை பாடசாலையில்

# டெங்கு ஒழிப்பு சிரமதானம்

நீலமேகம் பிரசாந்த்

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமானது, நேற்றுமுன்தினம் (4) நடைபெற்றது.

டெங்கு காய்ச்சல் பரவல் அபாயம் ஏற்பட்டுள்ளதால் பாடசாலை வளாகத்தில் நீர் தேங்கும், தேங்கியுள்ள பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டு சிரமதானம் முன்னெடுக்கப்பட்டதாக கொட்டகலை சுகாதார பரிசோதகர் எஸ்.சௌந்தர் ராகவன் தெரிவித்தார்.

இதன்போது, பாடசாலை பழைய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் உட்பட கொட்டக்கலை பிரதேச சபை உறுப்பினர்களும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியதோடு, தொடர்ந்தும் கொட்டகலை பகுதியிலுள்ள ஏனைய பாடசாலைகளிலும் சிரமதானப் பணியை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாக எஸ்.சௌந்தர் ராகவன் தெரிவித்தார்.



## தலவாக்கலை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய

# உபசெயலகம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி

**தவிசாளர் பாரத்தாசன் தெரிவிப்பு**

கே.சுந்தரலிங்கம்

லிந்துலை- தலவாக்கலை நகர சபைக்கு உட்பட்ட பொதுமக்களின் சேவைகளை இலகுபடுத்துவதற்காக, உபசெயலகத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது உப செயலகத்தின் பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தலவாக்கலை -லிந்துலை நகர சபையின் தவிசாளர் லெட்சுமணன் பாரதிதாசன் தெரிவித்தார்.

தலவாக்கலை, தியசிறிபுர பகுதியில் நகர சபைக்கு சொந்தமான கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இதன் பணிகளைப் பார்வையிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தலவாக்கலை -லிந்துலை நகர சபை பிரதேசத்தை சேர்ந்த மக்கள், தங்களுடைய தேவைகளை 25 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நுவரெலியாவுக்குச் சென்றே பூர்த்தி செய்து கொள்ளவேண்டிய நிலை காணப்பட்டது. இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வந்தார்கள். இதற்குத் தீர்வாகவே இந்த உபசெயலகம் அமைக்கப்படவுள்ளது என்றார்.



மக்கள் தொகைக்கேற்ப பிரதேச செயலகங்களை நுவரெலியா மாவட்டத்தில் அதிகரிக்க வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையும் வலுவாக வலுப்பெற்று இருந்தது. இந்நிலையில் நீண்டகாலமாக தலவாக்கலை நகரில் அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பல்வேறு வழிகளிலும் செயற்பட்டவர் மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பணியை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்னெடுத்துள்ளார்.

இதற்காக இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அரசாங்கம் மூலம் பாரிய நிதியினை ஒதுக்கித் தந்துள்ளனர். இந்தப் பணிகளை முன்னெடுப்பதற்காக தலவாக்கலை-லிந்துலை நகர சபையின் அனைத்து உறுப்பினர்களும் கட்சி தொழிற்சங்க இன மத மொழி பேதமின்றி ஒத்துழைத்து வருகின்றனர் என்றார்.

## நுவரெலியா புனித பிரான்ஸிஸ் சவேரியர் தேவாலயம்

# 175ஆவது ஆண்டில் தடம் பதிக்கின்றது

ஆ.ரமேஸ்

நுவரெலியா புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயம் 175 ஆவது ஆண்டில் நேற்று (05) தடம் பதித்துள்ளது.

தேவாலயத்தின் 175 ஆவது ஆண்டு மற்றும் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி, ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணியளவில் ஆரம்பமானதுடன், திருப்பலி பூசையை கண்டி மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய பிதா வியானி பெர்ணான்டோ தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, தேவாலய பங்குத் தந்தை சுகத் ரோஹன பெரேரா, தேவாலய உதவி பங்குத் தந்தை அருட் தந்தை சேவியர் டக்லஸ், நு/ நன்மாதா உயர்நிலை பாடசாலையின் பணிப்பாளர் அருட் தந்தை சிவந்தன் ரொட்ரிகோ ஆகியோர் வணக்கத்துக்குரிய மறைமாவட்ட ஆயருடன் இணைந்து, கூட்டு திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

மேலும், 2023 ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் ஜூபிலி ஆண்டு விழாவுக்கான ஓலை, கண்டி மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய வியானி பெர்ணான்டோவால் வாசிக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.



# மக்கள் பிரதிநிதிகள் எப்போதும் முன்மாதிரியாக இருக்கவேண்டும்

ஒரு நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த, அங்கு தேர்தல் நடத்தப்படவேண்டும். அதனூடாகவே மக்கள் தங்களுடைய விருப்பங்களுக்கேற்ப தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வர். கொரோனா வைரஸ் தொற்றின் போதும், பல நாடுகளில் தேர்தல்கள் நடத்தப்பட்டு, ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை அந்தந்த நாடுகளின் அரசாங்கங்கள் உறுதிப்படுத்தி இருந்தன.

சட்டவாக்க சபைக்குத் தெரிவாகும் எமது நாட்டைச் சேர்ந்தவர்களில் பலர், சபைக்குள் எவ்வாறு நடந்துகொண்டிருந்தனர் என்பதை, கடந்தகாலங்களில் நேரடியாகவே கண்ணுற்றோம். ஆக, பாராளுமன்றத்தின் நிகழ்வுகளை நேரடியாக அஞ்சல் செய்வதன் ஊடாக, தான் வாக்களித்துத் தெரிவானவர், சபைக்குள் என்ன செய்கின்றார் என்பதை, நேரடியாக அறிந்துகொள்ளமுடிகிறது.

நேரடி அஞ்சல் செய்வதற்கு அனுமதி அளிக்கப்படாத காலங்களில், தணிக்கை எனும் பெயரில் பலவிடயங்கள் மறைக்கப்படும். இன்றேல், நிலையியல் கட்டளையின் கீழ் அகற்றப்பட்டுவிடும். ஆனால், தற்போது அவ்வாறானதொரு நிலைமை இல்லை; நேரடியாகவே கண்டுகொள்ளலாம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சகலரும், சகல விடயங்களிலும் முன்னுதாரணமாகவே திகழவேண்டும். ஆனால், சபைக்குள் இடம்பெற்ற விவாதத்தின் போது, முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்காக, சபைக்கு வெளியேவைத்து தமது தரப்பு உறுப்பினர் தாக்கப்பட்டார் எனக் குற்றஞ்சாட்டி, ஐக்கிய மக்கள் சக்தியினர், சபையிலிருந்து வெளிநடப்புச் செய்திருந்தனர்.

கமெராக்கள் உற்றுநோக்க, பார்வையாளர் கலரிகளில் மக்கள் பார்த்திருக்க, ஊடகவியலாளர்களும் உற்றுநோக்கிவாறு இருந்தபோது, சபைக்குள் பல்வேறான சம்பவங்கள் கடந்தகாலங்களில் இடம்பெற்றன. அவையெல்லாம் விசாரிக்கப்பட்டன. ஆனால், முறைகேடாக நடந்துகொண்டவருக்கு எதிராக, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்றே தெரியாமல் போய்விட்டன.

ஆக, சபைக்கு வெளியே இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரிக்கப்படக்கூடும். ஆனால், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்று தெரியப்படுத்தப்படாமலே போகக்கூடும். அதனூடாக, ஏதுவுமே நடக்கவில்லையென மறைத்தே விடுவர். ஏனைய நாடுகளைப் பொறுத்தவரையில், பொதுவெளிகளில் சட்டத்தை மதிகாத மக்கள் பிரதிநிதிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றையடுத்து முகக்கவசம் அணிதல், பல நாடுகளிலும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனினும், முகக்கவசம் அணியாது, ஆடை வர்த்தக நிலையமொன்றுக்குச் சென்றிருந்த டென்மார்க் பிரதமர் ஃபெட்ரிக்சன்டுக்கு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. இதனூடாக, எவ்விதமான பாகுபாடுமின்றி, சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

பிரதமருக்குத் தண்டம் விதிக்கப்பட்டதன் ஊடாக, சகலரும் முகக்கவசங்களை பொதுவெளியில் கட்டாயம் அணித்திருக்கவேண்டும் என்பது இடித்துரைக்கப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகளில் பெரும்பாலானோர், சட்டதிட்டங்களைச் சரியாகக் கடைப்பிடிப்பர். இன்னும் சிலர், ஓரிரு படிகள் மேல்சென்று, முன்மாதிரியாக நடந்துகொள்வர்.

நியூஸிலாந்தில் பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், வைத்தியசாலைக்கு சைக்கிளில் சென்று, தனது இரண்டாவது குழந்தையையும் பிரசவித்திருந்தார் என்பது ஓர் உதாரணம் மட்டுமேயாகும் என்பதுடன், மக்கள் பிரதிநிதிகளின் முன்மாதிரி நடத்தையிலேயே, அந்நாட்டின் ஒழுக்கம் தங்கியிருக்கிறது என்பதை நினைவூட்டுகின்றோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

எவருடனும் முரண்படுதல் இலகுவானது. சிலசமயம், இதன் விளைவுகள் விசாலமானவை. தேவையற்ற வாக்குவாதங்களால், மகா புத்திசாலிகள் என எவரும் கருதலாகாது.

பேசும்போது காரசாரம் மிகையானால், அதைத் துண்டித்து விலகுவதே புத்திசாலித்தனம். ஒருவர் தன்னைப் புத்திசாலி என நிரூபிக்க எண்ணுது கோமாளித்தனம். சிலசமயம், பிறரை வெல்லவைக்கப் பின்வாங்குவது நல்லது.

கணவன் உக்கிரமாகப் பேசினால், மனைவி விட்டுக்கொடுத்து விலக வேண்டும். அதேபோல், மனைவி சண்டைபோடும்போது, கணவன் சமயோசிதமாக அப்பால் நகருவதே புத்திசாலித்தனமானது. ஏட்டிக்குப் போட்டியான தர்க்கத்தால் பிரயோசனம் இல்லை.

எல்லோருக்கும் ரோசம், தன்மானம் இருக்கின்றது. அதில் நியாயமும் இருக்கலாம். சில தர்க்கங்களை நிரூபிக்க வேண்டும் என அடம்பிடித்தலாகாது. சமாதானம், சமரசம், மௌனம், அமைதியை உருவாக்கும் எவரையும் பகைத்தலாகாது. இதனால் எவரும் கோழைகள் கிடையாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஆரியகுளமும் தமிழ்த் தேசிய அரசியலும்



என்.கே. அஷோக்பரன்

யாழ்ப்பாண நகரிலுள்ள ஆரியகுளம், துப்புரவு செய்யப்பட்டு, அழகாகக்கப்பட்டு, ஒரு மகிழ்வூட்டும் திடலாக உருப்பெற்றிருக்கிறது. இதனை யாழ்ப்பாண மாநகர சபை செய்திருக்கிறது. அதுவும், தனியார் அறக்கட்டளையொன்றின் நிதி உதவியுடன் இது நடந்தேறி இருப்பதாக அறியக்கிடைக்கிறது.

யாழ்ப்பாண நகரத்திலிருந்த குளமொன்று புனரமைக்கப்பட்டு, பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டிருப்பது அரசியல் பேசுபொருளாகி இருக்கிறது; விவாதப்பொருளாகி இருக்கிறது என்பது, தமிழ்த் தேசிய அரசியலின் வங்குரோத்துப் போக்கை சுட்டிக்காட்டி நிற்கிறது.

ஒரு புறத்தில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சார்ந்தவர்கள், 'ஆரியகுளம்' எனும் அலங்காரப் பெயர்பொறிப்பு, தமிழில் மட்டும் காணப்படுவது, மும்மொழிக் கொள்கைக்கு முரணானது என்று குரல் எழுப்பியிருந்தமை, இங்கு குறிப்பிடத்தக்கது.

நாடு முழுவதும், அரச அலுவலகங்களிலும் ஏனைய முக்கிய இடங்களிலும், சிங்கள மொழியில் மட்டும் பெயர்ப் பலகைகள் மட்டுமல்ல, முக்கிய அறிவுறுத்தல்களும் காணப்படும் நிலைபற்றி விமர்சிக்காதவர்கள், யாழ்ப்பாண மாநகர சபையின் நடவடிக்கையை மட்டும் கேள்விகேட்பது, பெரும் முரண்நகை.

எனினும், இன்னொரு வகையில் பார்க்கப்போனால், அது தமிழ்த் தேசிய அரசியலிடம் ஒரு முக்கிய கேள்வியை எழுப்புவதாக அமைகிறது. தமிழ்த் தேசிய அரசியல், தானும் சிங்கள-பௌத்த தேசிய அரசியல்போலவே செயற்படப்போகிறதா, அல்லது ஒரு மாற்று முன்னுதாரணமாக இருக்கப்போகின்றதா என்பதே அந்தக் கேள்வியாகும்.

சிங்கள-பௌத்த தேசியவாதம், தமிழ் மொழிப் பாவனையை அலட்சியம் செய்கிறது என்பது, தமிழ் மக்களின் குற்றச்சாட்டாகும். ஆகவே, கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் அணுகுமுறையைக் கையாண்டால், தமிழ் மட்டும் என்ற நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியமும் சிங்களம் மட்டும் என்ற நிலைப்பாட்டில் சிங்கள-பௌத்த தேசியவாதமும் நின்றுகொண்டால், அத்தகைய கண்ணுக்குக் கண் அணுகுமுறை, ஒரு குருடான உலகத்தையே உருவாக்கும்.

இந்த நாட்டில், மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுவதே, அனைவருக்கும் ஏற்ற குறைந்தபட்ச எதிர்பார்ப்பாக இருக்க முடியும். ஆனால், அது ஒரு வழிப்பாதையாக இருக்க முடியாது.

ஆரியகுளத்தின் வரலாறு கூறும் கல்வெட்டொன்றைப் பதித்திருக்கும் யாழ். மாநகர சபை, அதனை மும்மொழிகளிலும் அமைத்திருக்கிறது என்பது வரவேற்கத்தக்க விடயம். அதுமட்டுமல்ல, அங்கு மும்மொழிக் கல்வெட்டுகளும் ஒரேயளவில் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஒரு மொழியை முன்னிலைப்படுத்தி பெரிதாகவும் மற்றைய மொழிகளை கடமைக்கென அமைக்கவும் இல்லை; இதுவும் பாராட்டுக்குரியது. ஆகவே, இந்த விடயத்தில் யாழ். மாநகர சபையின் அணுகுமுறையை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினர் குறைகூறுவதானது அர்த்தமற்ற பேச்சாகும்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினரின் இத்தகைய அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளைவிட, அர்த்தமற்றதும் அசூயை மிக்கதுமான குற்றச்சாட்டுகளாக, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளும் விமர்சனங்களும் அமைகின்றன என்பது, தமிழ் மக்கள் வருத்தப்பட வேண்டிய விடயம் ஆகும்.

தமிழ்த் தேசிய அரசியலில் மிக நீண்ட காலமாகப் பெரும் குறைபாடாக அமைந்த விடயம், தமிழ்த் தேசிய அரசியலின் நிர்வாகத்திறனின்மை ஆகும். தமிழ்த் தேசிய அரசியலில் இருந்தவர்கள், சட்டவாக்கத்தில், அதுவும் எதிர்த்தரப்பாக மிக நீண்டகாலம் பங்கெடுத்திருந்தாலும், நிர்வாகத்தில் அவர்கள் பங்குபற்றியதில்லை.

அந்த அனுபவக்குறைவு, தமிழ்த் தேசிய அரசியலின் மிகப்பெருங்குறைபாடாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனால்தான், தமிழ்த் தேசிய அரசியல் ஆளும் எல்லா சபைகளிலும், பகட்டாரவார வார்த்தை ஜாலப் பேச்சுகள் கடுமையாக ஒலித்தாலும், நடைமுறையில் பெருந்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படுவதுமில்லை; செயற்படுத்தப்படுவதுமில்லை.

இதைப் பற்றி கேள்வி கேட்டால் கூட, மத்திய அரசாங்கத்தின் மீது பழியை வெற்றிகரமாகப் போட்டுவிடும் வாய்ஜால வித்தை வாயக்கப்பெற்றதால் மட்டுமே, தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இன்னமும் தப்பிப்பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முதலாவது வடமாகாண சபை பதவியிலிருந்த போது, தமிழ்த் தேசிய அரசியலின் இந்தக் குறைபாடு அப்பட்டமாக வெளிப்பட்டது. பேசுவது இலகு; மற்றவர்களின் குறையைச் சுட்டிக்காட்டிப் பேசுவது அதைவிட இலகு. ஆனால், காரியம் சாதிப்பது மிகக் கடினமானது. இந்த உண்மையை, அரசியலில் யாரும் மறுக்க முடியாது.

ஒரு மாநகர சபைக்கென, உள்ளூராட்சி மன்றுக்கென சட்டரீதியில் பல வலுவான அதிகாரங்கள் இருக்கின்றன. அந்த அதிகார வரம்புக்கு உட்பட்டு, அவற்றால் சாதிக்கக்கூடிய விடயங்கள் நிறையவே உள்ளன. ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதில், மிக அடிப்படையான உட்கட்டமைப்பு, சுகாதார, கல்வி, நகர அபிவிருத்தி செயற்றிட்டங்கள், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றைச் செய்யும் அதிகாரம், மாநகர சபைகளுக்கும் உள்ளூராட்சி மன்றுகளுக்கும் உண்டு. அதை வைத்துக்கொண்டே சாதிக்கக்கூடிய விடயங்கள் ஏராளமாக இருக்கின்றன.

ஆனால், வெற்று வாய்ஜால அரசியல் மட்டும் தெரிந்தவர்களால் அதைச் செய்ய முடியாது; அல்லது, கொள்கையறிவும் சட்டவாக்க ஆற்றல் மட்டும் உள்ளவர்களாலும் அதைச் செய்ய முடியாது. அதைச் சாதிக்க வலுவான நிர்வாக ஆற்றல் தேவை.

நிர்வாக ஆற்றல் என்பது, தமிழ்த் தேசிய அரசியலில் மிக அரிதான ஆற்றலாகவே காணப்படுகிறது. நிர்வாகம் என்பது, கட்டளை இடுதல் அல்ல. நிர்வாகம் என்பது, காரியத்தைச் சாதித்தல்; காரியத்தைச் சாதித்தல் என்பது எடுத்தோம், கவிழ்த்தோம் என்று நிகழ்த்தப்பட முடியாது. பல்வேறு சவால்களையும் தடைகளையும் முட்டுக்கட்டைகளையும் எதிர்ப்புகளையும் கடந்தே காரியசித்தி காண முடியும்.

மாநகர சபையிலும் உள்ளூராட்சி சபையிலும் போய், "தனிநாடு கொண்டுவருவோம்" என்று அர்த்தமற்ற பேச்சுகளை முன்னெடுப்பவர்களால், உள்ளூராட்சி சபைக்கு எந்தப் பயனுமில்லை. அவர்கள் ஆளுகின்ற உள்ளூராட்சி சபைகளால், அந்த மக்களுக்கும் எந்தப் பயனுமில்லை.

உள்ளூராட்சிச் சபையில் போய் நின்றுகொண்டு, 'தனிநாடு, சமஷ்டி' என்று உளறிக்கொண்டும், அர்த்தமற்ற தீர்மானங்களை நிறைவேற்றிக்கொண்டும் இருப்பவர்களைவிட, ஒரு பொது மலசலகூடமேனும் கட்ட நடவடிக்கை எடுக்கும், ஒரு சுகாதார நிலையத்தையேனும் அமைக்கும், ஒரு பாலர் பாடசாலையையேனும் அமைக்கும் உள்ளூராட்சி சபை உறுப்பினர் மேலானவர்.

நான் பாடசாலையில் படித்தகாலத்தில், மிகத் திறமையானதொரு பிரதி அதிபர் இருந்தார். ஒரு முறை, எங்கள் வகுப்பு மாணவர்கள் வகுப்பறையில் பாட்டுப்பாடி, நடனமாடிக் கொண்டிருந்தபோது, திடீரென்று அங்கு வந்த அவர், அன்று சொன்ன ஒரு விடயத்தை, இங்கு பதிவது பொருத்தம் என்று கருதுகிறேன். வகுப்பறையில் ஆடிப் பாடிய மாணவர்களைப் பார்த்து அவர் சொன்னார்: "வகுப்பறை என்பது படிக்கும் இடம். நீ ஆடப் போகிறாய் என்றால், மண்டபத்தில் கலை விழா நடக்கும்; அங்கு போய் ஆடு. நீ பாடப் போகிறாய் என்றால், கச்சேரி நடக்கும்; அங்கு போய் பாடு. அதை அதை அதற்குரிய இடத்தில் செய்" என்றார். தமிழ்த் தேசிய அரசியலுக்கு மிகத் தேவையான பால பாடம் இது.

சமஷ்டி, அதிகாரப் பகிர்வு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு; இதெல்லாம் பேசப்பட வேண்டிய இடம் பாராளுமன்றம். அது பாராளுமன்ற உறுப்பினர்களினதும் தேசிய அரசியலில் ஈடுபடுபவர்களுக்குமானதாகும். மாகாண சபையில் ஆட்சியிலிருந்து கொண்டு, பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியிலிருந்து பேசுவதை, மாகாண சபையில் பேசியும் தீர்மானம் நிறைவேற்றியும் எந்தப் பயனுமில்லை.

மாறாக, மாகாண சபையின் நிதியையும் இருக்கிற அதிகாரங்களையும் பயன்படுத்தி, மக்களுக்குச் செய்யக்கூடியவற்றையாவது செய்தால், மக்களின் வாழ்க்கை நிலையிலும் வாழ்க்கைத் தரத்திலும் கொஞ்சமேனும் முன்னேற்றம் ஏற்படும்.

அதுபோலவே, உள்ளூராட்சி சபையிலிருந்து கொண்டு சமஷ்டி, அதிகாரப் பகிர்வு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு பற்றிப் பேசுவதில் பயனில்லை. அதற்கான இடம், உள்ளூராட்சி சபையல்ல; உள்ளூராட்சி சபையில் நோக்கமும் அதிகாரமும் வேறுபட்டது. இந்த அரசியல் புரிதல், தமிழ்த் தேசிய அரசியலில் வரவேண்டும்.

அதற்காக, தமிழ்த் தேசிய அரசியலில் இந்தப் புரிந்துணர்வு உள்ளவர்களே இல்லை என்றும் சொல்லிவிட முடியாது. தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலுள்ள, அதிகமாக விமர்சனங்களை எதிர்கொள்ளும் ஆளுமைமிக்கதொரு பாராளுமன்ற உறுப்பினரோடு, சாதாரணமாக உரையாடும் வாய்ப்பொன்றின் போது, "நீங்கள், வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சராகும் எண்ணம் கொண்டிருக்கிறீர்களா" என்று கேட்டேன்.

"இல்லை! அது எனக்கான இடமல்ல. என்னுடைய ஆற்றல், சட்டவாக்கம் சார்ந்தது; நிர்வாகம் சார்ந்ததல்ல. ஆகவே, எனக்கான இடம் பாராளுமன்றம்தான்" என்று மிகத்தெளிவாகப் பதிலுரைத்திருந்தார். இவரது மாற்றாளியாக, தமிழ்த் தேசிய அரசியலில் முன்னிறுத்தப்படும் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினரிடமும் இதே கேள்வியைக் கேட்டபோது அவரும், "இல்லை! அது எனக்கான இடமல்ல. அரசியலமைப்புக்கான 13ஆம் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன். அதை எதிர்த்துக்கொண்டு, நான் எப்படிப் போய் 13ஆம் திருத்தத்தின் கீழான மாகாண சபையில் முதலமைச்சராவது? மேலும், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காகவே நான் உழைக்கிறேன். அதற்கான இடம், மாகாண சபையல்ல" என்று தெளிவாகக் கூறியிருந்தார்.

தமிழ்த் தேசிய அரசியலின் இருதுருவங்களாகக் கருதப்படும் இருவருக்கும், தமது அரசியல் பற்றி நல்ல தெளிவு இருக்கிறது. ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில், இந்தத் தெளிவும் புரிந்துணர்வும் குறைவாகவே இருக்கிறது.

மாநகர சபையின் பணியைத்தான், யாழ். மாநகர சபை செய்திருக்கிறது. அதற்குள் குதர்க்கம் பேசிக்கொண்டு, அர்த்தமற்ற விமர்சன அரசியல் செய்வது, எவருக்கும் அழகல்ல!

## கடிதங்கள்

### புத்தளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இறால் பண்ணைகள்



புத்தளம் மாவட்டத்தில் உள்ள எட்டு பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில், 1,700 ஹெக்டேயர் நிலப்பரப்பில், 850 இறால் பண்ணைகள் காணப்படுகின்றன. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால், 163 இறால் பண்ணைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், 1,200 மில்லியன் ரூபாய் பெறுமதியான 800 தொன் இறால்கள் அழிவடைந்துள்ளன. சுமார் 95 மில்லியன் ரூபாய் பெறுமதியான இறால் குஞ்சுகளும் அழிவடைந்துள்ளன. கடன்களைப் பெற்று, இறால் வளர்ப்பில் ஈடுபட்டிருந்த போதே, இவ்வாறு அழிவு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில், புத்தளத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பண்ணைகளைப் பார்த்துவிட்டு, பாதிக்கப்பட்ட இறால் வளர்ப்பு பண்ணையாளர்களுக்கு நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்திருந்தார். எனவே, அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதியின்படி, அரசாங்கம் உடனடியாக நஷ்ட ஈட்டைப் வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்ட இறால் பண்ணையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்துடன், இது தொடர்பாக இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் ஜே.பி. சமிந்த லக்மால், நிதி அமைச்சிடம் நஷ்ட ஈட்டுக்கான அனுமதி கோரி, கடிதம் அனுப்பி வைத்திருந்தபோதிலும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை.

–ரஸீன் ரஸ்மின்

ESOFT மெட்ரோ கம்பஸ் பட்டமளிப்பு வைபவம்-2021:

# மிகச் சிறப்பாக முன்னெடுப்பு

ESOFT மெட்ரோ கம்பஸின் வருடாந்த பட்டமளிப்பு வைபவம், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) அண்மையில் நடைபெற்றது. இந்த ஆண்டின் பட்டமளிப்பு வைபவத்தில், மொத்தமாக 1,800 மாணவர்கள் தமது பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.



வெற்றிகரமாகத் தமது கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு Pearson BTEC உயர் தேசிய டிப்ளோமாக்கள், Pearson Level 7 தகைமைகள், லண்டன் மெட்ரொபொலிடன் பல்கலைக்கழக (பிரித்தானியா) பட்டங்கள், MBA கள், கிங்ஸ்டன் பல்கலைக்கழக (UK) பட்டங்கள், MScகள் போன்றன வழங்கப்பட்டிருந்தன.

இரண்டு நாள்களில் ஒன்பது அமர்வுகளாக இந்த வைபவம் நடைபெற்றதுடன், சகல சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளையும் பின்பற்றப்பட்டிருந்தது. பட்டமளிப்புக்கு மேலதிகமாக, ஒவ்வொரு பிரிவிலும் உயர்ந்த பெறுபேறுகளைப் பதிவு செய்தவர்களுக்கு தங்கப் பதக்கங்கள், விசேட விருதுகள் போன்றனவும் வழங்கப்பட்டிருந்தன.

நிகழ்வின் பிரதான உரைகளை கல்விமான்கள், தொழிற்துறையின் முன்னோடிகளான LOLC ஃபினான்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி கொனார்ட் டயஸ், Axiata Digital Labs இன் பிரதம நிறைவேற்று அதிகாரி துஷேர கவ்தவத்த, ESOFT குழுமத்தின் தவிசாளரும் முகாமைத்துவ பணிப்பாளருமான கலாநிதி தயான் ராஜபக்ஷ, இலங்கை கட்டளைகள் சபையின் தவிசாளர் கலாநிதி சம்பத் வஹால, Moore Stephens Consulting பிரைவட் லிமிடெட் மற்றும் Moore Stephens Aiyar இன் முகாமைத்துவ பணிப்பாளரும் இணைப் பங்காளருமான திஷான் சுபசிங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் PhD கற்கையின் ஒழுங்கிணைப்பாளருமான பேராசிரியர் ஏ.ஏ.சி அபேசிங்க ஆகியோர் ஆற்றியிருந்தனர்.

பல்கலைக்கழக பங்காளர்களின் வெளிநாட்டு பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் மெய்நிகர் முறையில் இணைந்து கொண்டு, பட்டதாரிகளுக்கு வீடியோ வாயிலாகத் தமது வாழ்த்துகளைத் தெரிவித்தனர். இரு தினங்களிலும் Virtusa தொழில் வாய்ப்புகளை வழங்கும் அணியினர் பிரசன்னமாகியிருந்ததுடன், இளம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். புதிய பொருளாதார ஒழுங்கு முறைமையால் எழுந்துள்ள சவால்கள், வாய்ப்புகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையிலான பட்டதாரிகளைத் தயார்ப்படுத்துகின்றமை தொடர்பில் ESOFT பெருமை கொள்கின்றது.

21 வருட கால வரலாற்றை ESOFT கொண்டுள்ளதுடன், இலங்கையில் காணப்படும் மாபெரும் தனியார் உயர்கல்வி வலையமைப்பாகவும் அமைந்துள்ளது. நாடளாவிய ரீதியில் காணப்படும் 40 க்கும் அதிகமான கிளைகளினூடாக பரந்தளவு கற்கைகளை வழங்குவதுடன், பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான கற்கைகள் முதல், பட்டப்பின்படிப்பு கற்கைகள் வரை வருடாந்தம் 40,000 பேருக்கான கற்பித்தல்களை மேற்கொள்கின்றது.

2012ஆம் ஆண்டில், இலண்டன் கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்துடன் ESOFT கைகோர்த்து, பொறியியல் துறையில் பட்டப்படிப்புகளை வழங்க முன்வந்திருந்ததுடன், அதற்காக கட்டுபெத்த பகுதியில் விசேடமான பொறியியல் கல்வியகத்தையும் நிறுவியிருந்தது. 2013ஆம் ஆண்டில், இலண்டன் மெட்ரொபொலிடன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, கணினியியல், வியாபாரம், விருந்தோம்பல், பிரயாணம், சுற்றுலா போன்றவற்றில் பட்டப்படிப்புகளை வழங்க முன்வந்திருந்தது. கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்தினூடாக தகவல் தொழில்நுட்பத்தில் பல்வேறு MSc கற்கைகள், தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் பொறியியல் ஆராய்ச்சிப் பிரிவுகளில் சர்வதேச Doctoral கற்கைகள் போன்றனவும் அறிமுகம் செய்திருந்தது.

தமது கல்விச் சிறப்பு, வியாபார வினைத்திறன் போன்றவற்றுக்காக, Pearson (UK), BCS (UK), NBQSA, தேசிய வர்த்தக சம்மேளனம், இலங்கை வர்த்தக சம்மேளனங்களின் ஒன்றியம் ஆகியவற்றினூடாக பல உள்நாட்டு, சர்வதேச விருதுகளையும் ESOFT குழுமம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

24 ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள்:

# சிறந்த ஏற்றுமதியாளராக அல்ஃபா அப்பரல்ஸ்

அல்ஃபா அப்பரல்ஸ், 24ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வழங்கும் நிகழ்வில், 2019/20 ஆண்டுக்கான நடுத்தர பிரிவில் சிறந்த ஆடை ஏற்றுமதியாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ கலந்து கொண்டார்.



நாட்டின் ஏற்றுமதித் துறைக்கு பங்களிப்பு வழங்கி, அதனூடாகப் பொருளாதார வளர்ச்சிக்குக் கைகொடுக்கும் நிறுவனங்களின் ஒப்பற்ற செயற்பாடுகளை கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பொல்கஹாவெலவில் அமைந்துள்ள அல்ஃபா அப்பரல்ஸ், 2,200 க்கும் அதிகமான ஊழியர்களைத் தன்வசம் கொண்டுள்ளது. இதனுடன் இணைத்து, ஒமெகா லைன் குழுமத்தால் 1,300க்கும் அதிகமானவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு வழிகோலப்பட்டுள்ளது.

இரண்டு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக, ஆடைத் தொழிற்றுறையின் முக்கிய பங்களிப்பை வழங்கும் நிறுவனமாக இந்தக் குழுமம் திகழ்வதுடன், நாட்டினுள் அந்நியச் செலாவணியை கொண்டு வரும் வகையில் அமைந்துள்ளது. மேலும், உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதிலும் பங்களிப்பு வழங்குவதோடு, நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த சகல பாகங்களிலும் தனது உற்பத்தி வளாகங்களைக் கொண்டுள்ளது.

Sirio லிமிடெட், அல்ஃபா அப்பரல்ஸ் லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பணிப்பாளருமான பீலிக்ஸ் ஏ. பெர்ணான்டோ கருத்துத் தெரிவிக்கையில், “மிகவும் நெருக்கடியான காலப்பகுதியிலும் தமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பு, தியாகங்கள், விட்டுக்கொடுப்புகள் ஆகியவற்றின் ஊடாகத் தமது அயராத உழைப்பை வெளிப்படுத்தும் அல்ஃபா அப்பரல்ஸ் தமது சகல ஊழியர்களுக்கும் இந்த விருதை சமர்ப்பிக்கின்றது. நாம் குழுமமாக உறுதியாக மீண்டெழுந்துள்ளோம். எமது செயற்பாடுகளை விரிவாக்கம் செய்வது தொடர்பில் நாம் கவனம் செலுத்தி வருவதுடன், ஆடைத் தொழிற்றுறையில் முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாட்டாளராக எம்மை நிலைநிறுத்த எதிர்பார்க்கின்றோம்” என்றார். இவர், ஒமெகா லைன் குரூப் குழும பணிப்பாளராகவும் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் செயலாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சகல ஊழியர்களுக்கும் தொடர்ச்சியான பயிலல், விருத்தி சார்ந்த கலாசாரத்தை அல்ஃபா அப்பரல்ஸ் பேணி வருவதுடன், ஆரோக்கியமான பணி-வாழ்க்கை சமநிலையை கொண்டிருக்கக்கூடிய அழுத்தமில்லாத சூழலையும் கொண்டுள்ளது. அனைத்து ஊழியர்களும் பணியிடத்தைத் தமது இரண்டாவது இல்லம் என அழைக்கின்றனர்.

ஊழியர்களுக்குப் பரந்தளவு தொழில்நிலை விருத்தி வாய்ப்புகள், ஆலோசனை வழங்கல்கள், மென் திறன் பயிற்சிகள் போன்ற பல அனுகூலங்களை நிறுவனம் வழங்கி, பிராந்தியத்தின் ஏனைய நிறுவனங்களிலிருந்து தன்னை வேறுபடுத்தியுள்ளது.

ஊழியர்களுக்கு வழங்கப்படும் பராமரிப்பு சமூகத்துக்கும் நீடிக்கப்பட்டுள்ளது, ‘Hasarellak Soya’ எனும் நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக, முதியோர் இல்லங்கள், சிறுவர் இல்லங்களுக்கு உதவிகளை வழங்குவதுடன், சூழலைப் பாதுகாக்கும் வகையில் ‘Mihikathata Tharusevanak’ எனும் திட்டத்தையும் முன்னெடுக்கின்றது.

குழுமத்தின் தாய் நிறுவனம் லக்செம்பேர்க் நகரிலுள்ள Calzedonia Finanziaria ஆக அமைந்துள்ளதுடன், அதன் பிரதான வாடிக்கையாளர் இத்தாலியின், கல்செடோனியாவில் அமைந்துள்ளது. பெண்களுக்கான உள்ளாடைகள், காலுறைகள், இரவு நேர ஆடைகள், ஸ்டொக்கிங்கள், நீச்சல் உடைகள் போன்றவற்றை Calzedonia S.p.A தயாரிக்கின்றது. 5,000 க்கும் அதிகமான ஒற்றை வர்த்தக நாமம் கொண்ட விற்பனை நிலையங்களை கொண்டுள்ளதுடன், அவை உலகளாவிய ரீதியில் 57 நாடுகளில் நேரடியாக அல்லது Calzedonia, Intimissimi, Tezenis, Falconeri, Intimissimi Uomo மற்றும் Atelier Eme ஆகிய வர்த்தக நாம அங்கிகாரத்தின் அடிப்படையில் நிர்வகிக்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியா

பிரதமராக வரத்துடிக்கும் மம்தா

# புதிய வியூகம் வகுத்தார்

இந்தியாவின் பிரதமராக வரத் தனக்கு அனைத்து தகுதிகளும் இருப்பதாக, மேற்கு வங்க முதலமைச்சரும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான மம்தா பானர்ஜி கூறியுள்ளதோடு தேசிய அளவில் பாரதிய ஜனதா கட்சிக்கு மாற்று சக்தியாக தன்னை முன்னிறுத்தும் வகையில் வியூகம் அமைத்துவருகிறார்.

பாரம்பரிய கட்சியான காங்கிரஸின் தொடர் தோல்விகள், கட்சியை கை கழுவும் மூத்த தலைவர்களின் நடவடிக்கைகள் போன்றவற்றால் காங்கிரஸ் தள்ளாடி வருகிறது. இதைப் பயன்படுத்தி, எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அதற்குத் தலைமை தாங்க முயற்சிக்கிறார் மம்தா பானர்ஜி. அதற்கு ஏற்றாற்போல், முன்னர் பா.ஜ.கவில் இணைந்து வந்த காங்கிரஸ் கட்சியினர், தற்போது திரிணாமுல் காங்கிரஸை நோக்கி படையெடுக்கின்றனர்.

கோவா, ஹரியானா, திரிபுரா, உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த சில காங்கிரஸ் தலைவர்களும் மம்தாவுடன் இணைந்திருக்கின்றனர். எனினும் பெரிய மாநில வெற்றியோ சிறு மாநிலங்களில் பெறும் வெற்றியோ, நாட்டை ஆள போதாது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இதேவேளையில், எதிர்க்கட்சி தலைவர்களையும் மம்தா சந்தித்து வருகிறார். மும்பையில், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத் பவாருடனான அவரது சந்திப்பு, தேசிய அரசியலில் பேசு பொருளாக மாறியுள்ளது.

அரசியல் தலைவர்களை மட்டுமல்லாமல், வளரும் தொழிலதிபர்களையும் தொடர்ச்சியாகச் சந்திக்கிறார். மும்பையில் இப்படியான ஒரு சந்திப்பின் போது, இளம் தொழிலதிபர்களிடம், இந்தியாவின் பிரதமராகத் தனக்கு அனைத்து தகுதிகளும் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஏழு முறை நாடாளுமன்ற உறுப்பினர், மத்திய அமைச்சர், மிகப்பெரிய மாநிலத்தில் மூன்றாவது முறையாக முதலமைச்சர் என்பவை அவர் சுட்டிக்காட்டும் தகுதிகளாகும்.

வெளிநாட்டவர் நாட்டை ஆள்வதா என சோனியா காந்தி மீது எழுந்த சர்ச்சையின் போது, சரத் பவார் அக்கட்சியைக் கைப்பற்ற நினைத்தார். அவர் கட்சிக்குள் இருந்து அந்த முயற்சிகளை மேற்கொண்டார். தற்போது மம்தாவும் காங்கிரஸைக் கைப்பற்ற நினைக்கிறார்.

மேற்கு வங்கத்தில், மூன்றாவது முறையாக அவர் பெற்ற வெற்றியும் பவானிபூர் இடைத்தேர்தல் வெற்றியும் மம்தாவுக்கு அசுர நம்பிக்கையை அளித்துள்ளது. இதைப் பயன்படுத்தி, எதிர்க்கட்சிகளின் தேசிய முகமாக மாற, மம்தா பானர்ஜி துடித்துக் கொண்டிருக்கிறார்.

தமிழ் நாடு, ஜார்கண்ட், மகாராஷ்டிரா மாநிலங்களில் ஆளும் கட்சிகளுடன் காங்கிரஸ் கூட்டணியில் உள்ளது. மம்தாவின் திட்டம் நிறைவேற வேண்டுமானால் இக்கட்சிகள் காங்கிரஸை கைவிட வேண்டும். அதற்கு அக்கட்சிகள் தயாராக இருக்குமா என்ற முக்கிய கேள்வியும் மம்தாவின் நடவடிக்கைகளுக்குப் பின்னால் எழுந்துள்ளது.

சென்னை



## சகிகலா அஞ்சலி

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்துக்கு சசிகலா, நேற்று (05) நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்திய அவர், சிறிது நேரம் அங்கு மௌனம் கடைப்பிடித்தார்.

நாகலாந்து

## இராணுவத்தினரைத் தாக்கி வாகனங்கள் எரிப்பு

நாகலாந்தில் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களை கிளர்ச்சியாளர்கள் என்று கருதி, அவர்கள்மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் அவர்களைத் தாக்கியதுடன் வாகனங்களையும் எரித்தனர்,

பாதுகாப்புப் படையினரால் 13 பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பொதுமக்கள் பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்தியதில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த ஒரு வீரர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு படையினரின் வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய உள்துறை அமைச்சர் இது தொடர்பாக முழு விசாரணைக்கு உறுதியளித்துள்ளார்.

**“ பாதுகாப்பு படையினர், 13 பொதுமக்களை சுட்டுக் கொன்றுள்ளனர். இவர்கள் அனைவரும் நிலக்கரி சுரங்கத்தில் பணிபுரிந்த கூலித் தொழிலாளர்கள். தங்களது கிராமங்களுக்கு செல்ல காத்திருந்த போதுதான் இந்தப் படுகொலை சம்பவம் நிகழ்ந்துள்ளது**

மியான்மர் எல்லையில் இச்சம்பவம் நடைபெற்றது. அப்பகுதியில் கிளர்ச்சியாளர்களின் நடமாட்டம் குறித்து, இரகசிய தகவல் கிடைத்ததையடுத்து, பணியில் இருந்து வீடு திரும்பிய தொழிலாளர் லொரி மீது, இராணுவ வீரர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கோன்யாக் பழங்குடிகளின் தலைவர்கள் கூறுகையில், பாதுகாப்பு படையினர் 13 பொதுமக்களை சுட்டுக் கொன்றுள்ளனர். மேலும் 11 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் 15 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் பணிபுரிந்த கூலித் தொழிலாளர்கள். தங்களது கிராமங்களுக்கு செல்ல காத்திருந்த போதுதான் இந்தப் படுகொலை சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பெங்களூர்

ஒமிக்ரானால் மேலும் அச்சம்;

## ஐந்தாவது நபர் கண்டறியப்பட்டார்

பெங்களூரில் இடம்பெற்றுள்ள சம்பவம் ஒன்றின் மூலம், ஒமிக்ரான் தொற்றானது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் அதேவேளை மர்மத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஒமிக்ரான் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதாவது, அங்கு ஒமிக்ரான் வகை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட இரண்டு பேரில் ஒருவர் மருத்துவர்; இவர் ஒமிக்ரானால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்குச் செல்லாதவர். மேலும் இவரிடம், தொற்று ஏற்பட்டதற்கான எந்த அறிகுறியும் காணப்படாத நிலையிலேயே தற்பொழுது இவருக்கு ஒமிக்ரான் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதிலிருந்து வெளிநாடுகளுக்கு செல்லாத நபருக்கும் இந்தியாவில் அத்தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், ஒமிக்ரான் வெளிநாட்டில் இருந்து வரவில்லை என்றும் இந்தியாவிலேயே உள்ளது என்றும் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்ற முன்னாள் தலைவர் ராகேஷ் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

தடுப்பூசிகளைத் துரிதமாக செலுத்தியதன் காரணமாக, ஒமிக்ரான் தொற்றுக்கு எதிராக வலுவான நிலையில் இந்தியா இருப்பதாகக் கருதுவதாகக் கூறும் ராகேஷ் சர்மா, மரபணு பரிசோதனையையும் துரிதப்படுத்த வேண்டும் என்று கூறினார்.

ஒடிசா

## ஒடிசாவில் புதிய கல்வித்திட்டம்

மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கும் தனிப்பட்ட திறமைகளை வெளியே கொண்டு வந்து, அவர்கள் தங்களின் ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்தும் வகையில் கல்வித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் நவீன் பட்நாயக் தலைமையிலான அரசாங்கம் மூலம், கல்வித்துறையில் செய்யப்பட்டு வரும் அதிரடி மாற்றங்கள், மக்களிடையே பெருமளவில் வரவேற்பைப் பெற்று வருகின்றன.

கல்வித்திட்டத்தையும் ஆசிரியர் பயிற்சிகளையும் மாற்றி, பாடசாலைக் கட்டமைப்பில் மாற்றத்தை கொண்டு வரும் திட்டங்கள் மட்டும் இங்கு செயற்படுத்தப்படவில்லை.

டிஜிட்டல் வகுப்பறைகள், விவாதிக்க உதவும் வகுப்பறைகள், நூலகம், நவீன அறிவியல் சோதனை கூடங்கள் என்று புதிய தொழில்நுட்பங்களின் ஊடான முறைமைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. அது மட்டுமின்றி, மிக முக்கியமாக முன்னாள் பள்ளி மாணவர்கள், கம்யூனிட்டி உறுப்பினர்கள், உள்ளூர் அரசியல் தலைவர்கள் என்று பலரின் உதவிகளை வைத்து பள்ளிகளில் தரத்தை உயர்த்தும் வகையில் நிறைய பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

கேரளா

சபரிமலைக்கு வரும் பக்தர்களின்

## எண்ணிக்கை அதிகரிப்பு

கொரோனா பரவல் காரணமாக நாள்தோறும் 45 ஆயிரம் பக்தர்கள் சுவாமி தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், மண்டல பூஜையை முன்னிட்டு கோவிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோவில் நடை, மண்டல மற்றும் மகர விளக்கு பூஜைகளுக்காக கடந்த 15ஆம் திகதி திறக்கப்பட்டது.

கொரோனா பரவலை கருத்தில் கொண்டு நாள்தோறும் 45 ஆயிரம் பக்தர்கள் சுவாமி தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர். எனினும் பக்தர்கள் வருகை மென்மேலும் அதிகரித்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# வலுவான நிலையில் இந்திய அணி

## நியூசிலாந்துக்கு 540 ஓட்டங்கள் வெற்றி இலக்கு

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையில் மும்பை வெங்கடே சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றுவரும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், நியூசிலாந்து அணியின் வெற்றி இலக்காக 540 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

தமது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் நியூசிலாந்து அணி, 3ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் டார்லி மிச்சேல் 60, ஹென்றி நிக்கொலஸ் 36 (ஆட்டமிழக்காமல்) ஓட்டங்களைப் பெற்றுள்ளதுடன், பந்து வீச்சில் ரவிச்சந்திரன் அஷ்வின் 3, அக்ஷார் பட்டேல் 1 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளனர்.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 325 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் மயங் அகர்வால் 150, அக்ஷார் பட்டேல் 52 ஓட்டங்களைப் பெற்றதுடன், நியூசிலாந்தின் அஜாஸ் பட்டேல் 119 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இதேவேளை, தமது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 62 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

நியூசிலாந்து துடுப்பாட்டத்தில் கைல் ஜெமீசன் 17, டொம் லதம் 10 ஓட்டங்களையும் பந்து வீச்சில் ரவிச்சந்திரன் அஷ்வின் 4, மொஹமட் சிராஜ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, 7 விக்கெட்டுகளை இழந்து 276 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில், மயங் அகர்வால் 62, சட்டேஸ்வர் புஜாரா, சுப்மன் கில் ஆகியோர் தலா 47, ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் அஜாஸ் பட்டேல் 4, ரச்சின் ரவீந்திரா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் வெற்றி பெறுவதற்கு நியூசிலாந்து அணி 400 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

### இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தில்

# இந்திய அணியின் ஆட்டம் மிக மோசம்

## மனம் திறந்தார் சௌரவ் கங்குலி

இந்திய அணி, கடந்த 4, 5 ஆண்டுகளில் இருபதுக்கு 20 போட்டிகளில் மோசமாகச் செயற்பட்டது. நடந்து முடிந்த இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தில் இதற்குமுன்னர், இவ்வாறு மோசமாக விளையாடியதைத் தான் ஒருபோதும் பார்த்ததில்லை என்றும் இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

போதுமான சுதந்திரத்துடன் இந்த உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய வீரர்கள் விளையாடவில்லை என நான் நினைக்கிறேன். சில நேரங்களில் பெரிய போட்டித் தொடரில் இதுபோன்று நடக்கலாம். நியூஸிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு எதிராக இடம்பெற்ற போட்டிகளில் இந்த சூழலைப் பார்த்தேன் என்றார்.



### இந்தியன் சூப்பர் லீக்

# முதல் வெற்றியை சுவைத்தது நோர்த் ஈஸ்ட் யுனைடெட்

கோவாவில் இடம்பெற்றுவரும் 8ஆவது இந்தியன் சூப்பர் லீக் கால்பந்து தொடரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற போட்டியில், நோர்த் ஈஸ்ட் யுனைடெட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் எப்.சி.கோவாவை தோற்கடித்து முதலாவது வெற்றியை சுவைத்தது.

நோர்த் ஈஸ்ட் வீரர் காசா கமாரா கடைசி நிமிடத்தில் கோல் அடித்து அணிக்கு வெற்றியை பெற்றுத் தந்தார்.

மற்றோர் போட்டியில், நடப்பு சாம்பியனான மும்பை சிட்டி அணி 3-1 என்ற கோல் கணக்கில் பெங்களூரு எப்.சி.யை வீழ்த்தி 3ஆவது வெற்றியை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### ஐ.பி.எல் 2022

# சர்ச்சையில் அஹமதாபாத் அணி




அஹமதாபாத் அணியை வாங்கியுள்ள சி.வி.சி.கேப்பிட்டல் நிறுவனம் மீது எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் நடுநிலையான குழு அமைத்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் ஜெய் ஷா தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபையின் 90ஆவது ஆண்டு பொதுக்குழு கூட்டம் கொல்கத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அடுத்த வருடம் இடம்பெறவுள்ள ஐ.பி.எல். தொடருக்கு புதிய வரவான அஹமதாபாத் அணியை ரூ.5,625 கோடிக்கு சி.வி.சி.கெப்பிட்டல் நிறுவனம் வாங்கியுள்ளது.

அந்த நிறுவனம் வெளிநாடுகளில் உள்ள சூதாட்ட நிறுவனங்களுடன் தொடர்பு வைத்து இருப்பதாக தற்போது சர்ச்சை எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்ஆபிரிக்காவுடனான டி20 போட்டிகள் ஒத்திவைப்பு




தென் ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட், 3 ஒருநாள் சர்வதேச போட்டிகள், நான்கு இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாட இந்திய அணி திட்டமிட்டிருந்த நிலையில், இருபதுக்கு 20 போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்ஆபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஒமிக்ரான் மாறுபாடு உலகம் முழுவதும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளதால், இந்திய அணி தென் ஆப்பிரிக்கா செல்லுமா என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில் பி.சி.சி.ஐ.யின் வருடாந்த பொதுக்குழு கூட்டம் தலைவர் கங்குலி தலைமையில் கொல்கத்தாவில் நடைபெற்றது. பி.சி.சி.ஐ. செயலாளர் ஜெய் ஷா உட்பட அதன் முக்கிய நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் தென் ஆபிரிக்கா அணியுடனான தொடர், கொரோனா பாதுகாப்பு வழிமுறைகள், ஒமிக்ரான் அச்சுறுத்தல் உட்பட தற்போதைய சூழல் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரு அணிகளுக்கு இடையேயான டி20 கிரிக்கெட் போட்டிகள் ஒத்திவைக்கப்படுவதாகவும் போட்டி நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் பி.சி.சி.ஐ. செயலாளர் ஜெய் ஷா அறிவித்தார்.

இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட் போட்டி இம்மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பி.சி.சி.ஐ உறுதி செய்துள்ளது.

ரஷ்யா

# ஒமிக்ரானுக்கு எதிராக வழக்கு



உலக சுகாதார ஸ்தாபனத்தின் மீது ரஷ்ய தொழிலதிபர் ஒருவர் வழக்குத் தொடர்ந்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவிலுள்ள Omicron Network of ophthalmology clinics என்ற மருத்துவமனையின் தலைமை செயற்பாட்டு அதிகாரியான அலெக்ஸாண்டர் பாடர் என்பவரே இவ்வாறு, உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்துள்ளார்.

தனது நிறுவனத்தின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தி விட்டதாக, குற்றஞ்சாட்டியே அவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "புதிய கொவிட் மாறுபாட்டிற்கு தனது கிளினிக்கின் பெயரைச் சூட்டியுள்ளமை, தனது வணிகத்துக்கு தீங்கை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. குறிப்பாக எங்கள் நிறுவனம், மருத்துவம், சுகாதாரத் துறையில் முக்கிய சேவை வழங்கும் நிறுவனம் என்பதால், ஒமிக்ரான் என்ற வைரஸ் பெயரை சூட்டியுள்ளது எங்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

நேபாளம்




# விமானத்தை தள்ளிச் சென்ற பயணிகள்

விமானமொன்றை அதில் பயணித்த பயணிகள் இறங்கி, தள்ளிச் சென்ற விநோத சம்பவமொன்று நேபாளத்தில் இடம்பெற்றுள்ளது.

நேபாளத்தில் உள்ள பஜுரா விமான நிலையத்தில், தாரா ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான சிறிய ரக விமானமொன்றே இவ்வாறு தள்ளிச் செல்லப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த விமானம் தரையிறங்கிய போது திடீரென அவ்விமானத்தின் பின்புற டயர் ஒன்று வெடித்துள்ளது. இதனால் விமானமானது அவ்விடத்தை விட்டு நகர முடியாமல் ஓடுதளத்திலேயே நின்றுவிட்டது.

இதனையடுத்து செய்வதறியாது திகைத்த விமான நிலைய ஊழியர்கள் மற்றும் பயணிகள் ஒன்றாக இணைந்து அவ்விமானத்தை தள்ளிச் சென்றுள்ளனர்.

இது குறித்து வெளியான வீடியோவானது தற்போது சமூக வளைத்தளத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா



# ஆசனவாய்க்குள் வெடிகுண்டு

## அதிர்ச்சியடைந்த மருத்துவர்கள்

நபர் ஒருவரின் ஆசன வாய்க்குள் வெடிகுண்டு இருந்த சம்பவம் பிரித்தானியாவில் புதன்கிழமை (01) ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

பிரித்தானியாவில் Gloucextsrshire என்னும் பகுதியில் வசித்து வரும் குறித்த நபர் இராணுவ ரீதியான பொருட்களை சேகரித்து வைக்கும் பழக்கமுடையவர் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் சம்பவ தினத்தன்றுஅவர் குறித்த இராணுவப் பொருட்கள் வைத்திருக்கும் அறைக்கு சென்றதாகவும், அப்போது நிலைதடுமாறிய அவர் 2 ஆம் உலகப்போர் காலத்தைச் சார்ந்த வெடிகுண்டு ஒன்றின் மீது விழுந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து உடனடியாக அருகில் இருந்த வைத்தியசாலையில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவரின் ஆசனவாய்க்குள் வெடிகுண்டு இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து உடனடியாக இராணுவத்தின் வெடிகுண்டு நிபுணர்களுக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

எனினும், அவர்கள் வருவதற்கு முன்பாகவே மருத்துவர்கள் தங்களது விடாமுயற்சியால் குறித்த வெடிகுண்டை வெளியேற்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா



# பாம்பை விரட்ட வீட்டைக் கொளுத்திய நபர்

நபர் ஒருவர் பாம்பை விரட்டுவதற்காக வீட்டையே கொளுத்திய சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவில் உள்ள பூல்ஸ்வில்லே அதிக விஷ பாம்புகள் நிறைந்த பகுதியாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த பகுதியில் வசித்து வந்த நபர் ஒருவரின் வீட்டிற்கு எதிர்பாரத விதமாக அண்மையில் பாம்பொன்று புகுந்துள்ளது.

இதனை சற்றும் எதிர்பாராத அவர் அப்பகுதியில் எளிதில் தீப்பற்றக் கூடிய பொருள்கள் இருப்பதை மறந்து பாம்பை விரட்டுவதற்காக நெருப்பு புகையை பயன்படுத்தியுள்ளார்.

இதன்போது எதிர்பாராத விதமாக வீட்டில் உள்ள பொருட்களில் தீ பற்றிக் கொண்டதால் வீடு முழுவதும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இது குறித்து அயலவர்கள் தீயணைப்புத் துறையினருக்கு தெரியப்படுத்தவே அங்கு விரைந்த தீயணைப்பு படையினர் வெகுநேரமாக போராடி தீயை அணைத்துள்ளனர்.

இத் தீ விபத்திலும் வீட்டிற்குள் புகுந்த பாம்பின் உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா



# கிராக்கியான ஆடு

ஆடொன்று 21,000 அவுஸ்திரேலிய டொலருக்கு (இலங்கை மதிப்பில் சுமார் 42 இலட்சத்துக்கு) ஏலத்தில் எடுக்கப்பட்ட சம்பவம் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்றுள்ளது. மிகவும் அரிய ஆடு இனங்களில் ஒன்றாகக் கருதப்படும் மார்ரகேஷ் என்ற ஆடே இவ்வாறு ஆண்ட்ரூ மோஸ்லி என்பவரால் ஒன்லைனில் ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியா



# குலுங்கியது இந்தோனேசியா

இந்தோனேசியாவில் நேற்று (05) அதிகாலை சுமார் 5:17 மணியளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று உணரப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அந்நாட்டில் உள்ள டோபெலோ நகரத்திற்கு வடக்கு பகுதியில் 174.3 கிலோ மீற்றர் தூரத்தில் இந்நிலநடுக்கம் உருவானதாகவும், இது ரிச்டர் அளவில் 6.2 ஆக பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 06 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.